நியூ கேம்பிறிட்ஜ்
திருநெல்வேலிச் சந்தி
புதிய வகுப்புக்கள் ஆரம்பம்
28-9-80
G.C.E. A/L 81, 82.
தூயகணிதம், பிரயோக கணிதம், பௌதிகம், இரசாயனம்,
தாவரவியல், விலங்கியல்,
SPOKEN ENGLISH
By முத்துலிங்கம்
தட்டெழுத்து, சுருக்கெழுத்து,
Radio & T. V.

பக்கங்கள் 8

ஈழநாடு
The EELANAADU
50 சதம்

மலர் 22 | புரட்டாதி 7 | ஜூல்-கஃ 12 | இதழ் 225
யாழ்ப்பாணம் | செவ்வாய்க்கிழமை | 23 - 9 - 80

UNIVERSITY OF SRI LANKA - JAFFNA CAMPUS LIBRARY
RECEIVED 1980-9-24
PERIODICALS DIVISION

**கொலைமுயற்சி வழக்கு**

[கொழும்பு]

கனகரத்தினம் கொலை முயற்சிவழக்கு டிசம்பர்மாதம் 8ம் திகதிவரை கொழும்பு மேல்நீதிமன்றத்தினால் ஒத்தி வைக்கப்பட்டுள்ளது. (ம)

**செங்கலடி கொள்ளை வழக்கு**

(கொழும்பு)

செங்கலடி கொள்ளை வழக்கு அடுத்தாண்டு ஜனவரி மாதம் 5ம் திகதிவரை ஒத்திவைக்கப்பட்டுள்ளது. (ம)

★ ஈரான்-ஈராக் எல்லையில் கடும்சண்டை நடக்கிறது

# தெஹ்ரான் விமானநிலையம்மீது ஈராக் விமானங்கள் குண்டுமாரி!

## ஈரானின் சகல இராணுவ தளங்களை அழிக்க திட்டம்

லண்டன், செப். 22

**ஈரான்—ஈராக் எல்லையில் தொடர்ந்து கடும்சண்டை நடைபெற்றுக்கொண்டிருக்கும் அதேநேரத்தில், ஈராக் யுத்த விமானங்கள் நேற்று ஈரானின் எல்லைக்குள் முன்னேறிச்சென்று, தெஹ்ரான் சர்வதேச விமான நிலையத்தை குண்டுமாரி பொழிந்து தாக்கியதுடன், மேலும் ஐந்து விமானநிலயங்கள் மீதும் கடுந்தாக்குதல் நடத்தின.**

**ஈராக் யுத்தவிமானங்களின் கடும்தாக்குதலினால் ஈரானின் போயிங் விமானமொன்றும், விமான ஓடுபாதையும் பெரிதும் சேதமுற்றது. விமானநிலையத்தின் அருகே இருந்த வீடமைப்புத்திட்டமொன்றும் சின்னாபின்னமானது!**

ஈரான்- ஈராக் எல்லையில் கடும் சண்டைநடைபெற்றுக் கொண்டிருக்கிறது. நேற்றைய யுத்தத்தில் ஈரானுக்கு பலத்த சேதமேற்பட்டதாக யுத்த முனையிலிருந்து வெளிவரும் செய்திகள் தெரிவிக்கின்றன.

இதே நேரத்தில் ஈராக் தலைநகர் பாக்தாத்திலிருந்து வெளிவந்த செய்திகள், ஈரானிலுள்ள சகல இராணுவத்தளங்களையும் அழித்துவிட ஈராக்கிலுள்ள இராணுவ உயர் தலைமைப்

(8-ம் பக்கம் பார்க்க)

✱ இசைநிகழ்ச்சியின்போது சம்பவம்:

## கல்வீச்சு, தாக்குதலில் ஏழு பொலிஸார் காயம்!

### 25 இளைஞர்களுக்கு றிமாண்ட்

[யாழ்ப்பாணம்]

யாழ் திறந்தவெளியரங்கில் நடந்த ஜேசுதாசின் இசைநிகழ்ச்சியின்போது ஏற்பட்ட சம்பவத்தில் 7 பொலிசார் காயமடைந்தனர்.

இசைநிகழ்ச்சியை இலவசமாக பார்ப்பதற்கு, நுழைவாசல்களினூடாக, பெருந்திரளான வாலிபர் உட்செல்ல முயன்றசமயம், பொலிசார் தடுத்தபோது இச்சம்பவம் இடம்பெற்றது.

கல்வீச்சும் தாக்குதல்சம்பவமும் ஏற்பட்டதைத் தொடர்ந்து 7 பொலிசார்காயமடைந்தனர்.

இவர்களில் ஒருவர் யாழ்ஆஸ்

(8-ம் பக்கம் பார்க்க)

## கோஷ்டிமோதலில் இருவர் பலி!

[யாழ்ப்பாணம்]

கொழும்புத்துறையில் இருகோஷ்டிகளுக்கிடையில் நடந்த பயங்கர மோதலில் ஏ. குமாரவேலு [ 0 வயது], கே. யோகசாமி [46 வயது] ஆகியோர் பலியானார்கள்.

இச்சம்பவத்தின்போது பலத்த காயமடைந்த 6பேரும் காயமடைந்த 12 பேரும், யாழ் பெரியாஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

உதவி பொலிஸ் அதிபர் திரு. எஸ். நவரத்தினராசா, உதவி பொலிஸ் அதிபர் ஜனுப் நிசாம் ஆகியோர் சம்பவம் நடந்த இடத்திற்கு நேரில் சென்று பார்வையிட்டனர்.

ஒரு வருடத்திற்கு முன்னர் நடந்த பழைய சண்டை காரணமாகவே இச்சம்பவம் நடைபெற்றதாக கூறப்படுகிறது.

காயமடைந்தவர்களில், சந்

(8-ம் பக்கம் பார்க்க)

## "புதிய பாராளுமன்ற கட்டடம் எதிர்கால இலங்கைபற்றிய கனவை பிரதிபலிக்கும்"

### நவரத்தின பிரதிஷ்டை வைபவத்தில் ஜனாதிபதி

(ஸ்ரீஜயவர்த்தனபுர)

"இங்கு உருவாகும் புதிய பாராளுமன்றக்கட்டடம், சுதந்திரத்தைப்பேணும் இடமாக நிலைத்துநிற்கும். நாட்டின் உயர்சட்ட சபையான பாராளுமன்றம் இங்கு செயல்படும்" என்று புதிய பாராளுமன்றக்கட்டிடத்தின் நவரத்தின பிரதிஷ்டைவைபவத்தில் ஜனாதிபதி திரு. ஜே. ஆர். ஜெயவர்த்தன உரையாற்றுகையில் கூறினர்.

அவர் தொடர்ந்து பேசுகையில் புதிய கட்டடம் எதிர்கால இலங்கைபற்றியஎமது கனவை பிரதி பலிப்பதாக இருக்கும். இக்கட்டடத்தை பயன்படுத்துவோர், கடந்தகால எமது சாதனைகளை நினைவு கூறட்டும். நிகழ்காலத்தில் அவர்கள் நேர்மையுடன் பணிபுரியட்டும் எதிர்காலத்தில் தமது பொறுப்புக்களை உணரட்டும்" என்றார்.

அமிர் செய்தி:

"எனது இபக்கம் பாராளுமன்ற ஜனநாயக முறையில் நம்பிக்கை வைத்துள்ளது. சுதந்திரமான, உண்மையான பாராளுமன்ற ஆட்சியானது, பாராளுமன்ற உறுப்பினர்கள் தமது கடமையைத் திருப்திகரமாக புரிவதற்கான சகல வசதிகளையும் அளித்து, சந்

(8-ம் பக்கம் பார்க்க)

## சாந்தி கூட்டத்திற்குத் தடை

[யாழ்ப்பாணம்]

இன்று நடைபெறவிருந்த சாந்தி பிலிம்ஸ் லிமிட்டெட்டாரின் 3வது வருடாந்தக் கூட்டம் ஒரு கட்டாணை மூலம் யாழ்ப்பாண நீதில்

(8-ம் பக்கம் பார்க்க)

திருகோணமலைக்கும் - யாழ்ப்பாணத்திற்குமான நேரடி சொகுசு பஸ்சேவை...

தினமும் காலை யாழ்ப்பாணத்திலிருந்தும், மாலை திருகோணமலையிலிருந்தும் பயணத்தை சொகுசாக நடத்தலாம்.

முதலாவதுசேவை 25-09-80வியாழக்கிழமை காலை5-00மணி சுபவேளையில் யாழ்ப்பாணத்திலிருந்து திருகோணமலைக்கு ஆரம்பமாகும்.

விஜயா ரூர்ஸ் VIJAYA TOURS.

யாழ்ப்பாணத்தில் ஆசனங்கள் பதிவுசெய்ய வசதியுண்டு.

தனிநபர்: ரூபா 25—00 மட்டுமே

விபரங்கட்கு:
எஸ். சற்குணராஜா அன் கோ., 72, ஸ்ரான்லி வீதி, யாழ்ப்பாணம். போன்: 7512
கல்யாணி கிறீம் ஹவுஸ், 73, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம். போன்: 8077

திருகோணமலையில் ஆசன பதிவுக்கான இடம் பின்னர் அறிவிக்கப்படும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## வரி விளம்பரம்

### விற்பனைக்கு

பல நீள, அகலத்தில் வேம்பு பலகையும் 4×3 நிலே, யன்னல் திராந்தியும் விற்பனைக்கு உண்டு. நேரில் பார்வையிட்டு விலே கோரவும். மகாதேவா, கல்கமுவா. 6832

### வாடகைக்கு

இல. 114 கடற்கரை வீதி, நாவாந்துறையில் சில்லறைக் கடை ஒன்றிற்குரிய சகல தளபாடங்களுடன் கடையும் உடன்வாடகைக்கு கொடுக்கப் படும். தொடர்பு கொள்ள வேண்டிய முகவரி: ஞானகிரி ஹோட்டல், இல. 372, பிச் ரோட், நாவாந்துறை, யாழ்ப்பாணம். 6900

## நடேசர்அபிஷேகம் இன்று

(சித்தன்கேணி)

சித்தன்கேணி சிவசிதம்பரேஸ்வரர் ஆலயத்தில் இன்று பிற்பகல் சதுர்த்தசி நடேசர் அபிஷேகம் நடைபெறும். அபிஷேகத்தைத் தொடர்ந்து சுவாமி வீதி உலா வருவார். (இ)

## நிரந்தர தர்மகர்த்தா

(யாழ்ப்பாணம்)

உயரப்புலம் உத்துங்க விநாயகர் ஆலய பரிபாலன சபை கலேந்ததைத்தொடர்ந்து நிர்வாகப் பொறுப்பை நிரந்தர தர்மகர்த்தா பொறுப்பேற்றுள்ளார். வழிபடுவோர் நிரந்தர தர்மகர்த்தாவின் நிர்வாகத்திற்கு பூரண ஒத்துழைப்பு நல்கிவருகின்றனராம். (அ)

உடுத்துறைக் கொலேவழக்கு:

# 'சார்ஜன்ட் அனைத்தையும் பதிந்தாரா என்றுதெரியாது'

## கான்ஸ்டபிள் சாட்சியம்

(பச்சிலைப்பள்ளி)

முறைப்பாட்டுக்காரரான செல்லேயா சீனிப்பிள்ளே சம்பவத்திற்கு மறுதினம் காலே மூன்று மணிக்குப் பின் தந்த முறைப்பாடுபற்றி ஞாபகமில்லே. சீனிப்பிள்ளே தனது முறைப்பாட்டில் இறந்தவரது வீட்டுக்கு ரோச் லேட்டை எடுத்துக்கொண்டு சென்றதாகக் கூறவில்லே.

உடுத்துறையைச் சேர்ந்த செல்லேயா அருணசலத்தின் கொலே வழக்கில் முதலாம், நான்காம் எதிரிகளின் சார்பில் ஆஜரான சட்டத்தரணி செல்லத்தம்பியின் குறுக்கு விசாரணையின்போது, பளேப் பொலிஸ்நிலேயக் கான்ஸ்டபிள் திரு. கே. வீரசிங்கம் மேற்கண்டவாறு கூறினர்.

பளே சுற்று நீதிமன்ற நீதிபதி கே. வி. விக்கினேஸ்வரன் முன்னிலேயில் இவ்வழக்கு விசாரணை நடைபெற்றது. இவ்வழக்கில் 16-10-79ம் திகதியன்று இரவு உடுத்துறையைச் சேர்ந்த செல்லேயா அருணசலம் என்பவரை துப்பாக்கியால் சுட்டுக்கொலே செய்ததாக அதே இடத்தைச் சேர்ந்த தங்கவேலு அருந்தவச்செல்வம், கதிரேசு சிவபாலசிங்கம், சங்கரப்பிள்ளே ஜெயராசா, செல்லச்சாமி ஜெயபாலசிங்கம் ஆகிய நால்வர் மீது பளேப் பொலிசாரால் வழக்குத் தாக்கல்செய்யப்பட்டுள்ளது.

பொலிஸ்கான்ஸ்டபிள் திரு. கே. வீரசிங்கம் குறுக்கு விசாரணையின்போது மேலும் கூறியதாவது: இச்சம்பவம் இரவு நேரத்தில் நடைபெற்றது. முறைப்பாட்டுக்காரரான செல்லேயா சீனிப்பிள்ளே தான் ரோச்லேட் வைத்திருந்ததாகவும், ஆனல் பற்றவைக்கவில்லே எனவும் கூறினர். இதனை வாக்கு மூலத்தில் கடைசியாகத்தான் கூறினர். இதனை நான் கேட்ட கேள்வி ஒன்றுக்குப் பதிலாகக் கூறினரா? என்பது பற்றி ஞாபகமில்லே. சினிப்பிள்ளே வழமைபோல் ரோச்லேட் வைத்திருந்து பற்றுமல் விட்டாரா அல்லது சம்பவம் நடந்த அன்று மட்டும் ரோச்லேட் கொண்டு சென்று பற்றவைக்காமல் விட்டாரா எனக் கூறியது பற்றி ஞாபகமில்லே. சீனிப்பிள்ளே வாக்குமூலத்தில் எதிரிகள் வேறொரு சம்பவத்திலும் ஈடுபட்டதாகக் கூறினர்.

நீதிபதியின் கேள்விக்கு சாட்சி பதிலளிக்கையில் கூறியதாவது: "நான் எட்டாம் வகுப்புக்குச் சமமான சிங்களப் பரீட்சையில் சித்தியடைந்துள்ளேன். நான் சாட்சியத்தைத் தமிழில் கேட்டுச் சிங்களத்தில் மொழிபெயர்த்துக் கூற சார்ஜன்ட் பிரேமரட்ண பதிவுசெய்தார். ஆனல் சார்ஜன்ட் அனைத்தையும் பதிவு செய்தாரா? என்பது பற்றித் தெரியாது. பதிவுசெய்யப்பட்டவற்றை வாக்கியம் வாக்கியமாக நான் சாட்சிக்கு வாசித்துக் காட்டும்போது சாட்சியால் கூறப்பட்டவை எல்லாம் எழுதப்பட்டுள்ளனவா? என நான் சரிபார்க்கவில்லே.

இவ்வழக்கில் 2ம், 3ம் எதிரிகள் சார்பில் ஆஜரான சட்டத்தரணி சிறிசிவாயா குறுக்கு விசாரணை செய்யும்போது சாட்சி கூறியதாவது: சீனித்தம்பி நீதிமன்றத்தில் அளித்த வாக்குமூலத்தைக் கேட்டேன். ஆனல் அவதானிக்கவில்லே. சாட்சியத்தினை சட்டத்தரணி பாலகிருஷ்ணர் நெறிப்படுத்தினர்.

சட்டத்தரணி: சட்டத்தரணிக்கு உதவியாக அமர்ந்து இருந்தீரா?-ஆம்.

சட்: சம்பவம் நடந்த இடத்திற்குச் சென்றீரா?-ஆம் போனேன்.

சட்: வேறு யார் பொலிஸ் உத்தியோகத்தர்கள் வந்தார்கள்?-ஞாபகமில்லே.

சட்: யார் போகச் சொன்னது?-சார்ஜண்ட் பிரேமரட்ண.

சட்: வேறு பொலிஸ் உத்தியோகத்தர்களும் வந்தார்களா?-ஆம்.

சட்: தமிழ் தெரிந்த பொலிஸ் உத்தியோகத்தர்கள் வந்தார்களா?-ஞாபகமில்லே.

பொக்கட் குறிப்புப் புத்தகத்தையும்கொண்டுபோனேன் ஆனல் நான் பதியவில்லே. சார்ஜண்ட் பிரேமரட்ணதான் பதிவுசெய்தார். குற்றவியல் பதிவுப் புத்தகத்தில் எதுவும் எழுதவில்லே. இப்படியான சம்பவங்களில் பொலிஸ் உத்தியோகத்தருடன், சார்ஜண்ட் சென்றல் அவரே குறித்துக்கொள்வார். சம்பவம் நடந்த இடத்தில் சி. சுந்தரலிங்கம், இறந்தவரது மனைவி, அவருடைய மகள் ஆகியோரின் சாட்சியங்கள் சார்ஜண்டால் பதிவு செய்யப்பட்டது ஞாபகமிருக்கிறது.

பளேப்பொலிஸ் நிலேயப் பொறுப்பதிகாரி திரு. எ. சி. விஜயசூரியா வழக்கை நடத்தினர். முறைப்பாட்டுக்காரர் சார்பில் சட்டத்தரணிகள் [illegible] நாதன் ஆகியோர் ஆஜரானார் [illegible] காணிகள் ஸ்ரீசிவாயா எஸ். செல்லத்தம்பி ஆகியோர் ஆஜரானர்கள். (க)

# கே. ஜி. எக்ஸ்பிரஸ் பஸ் சேவை

## யாழ் – கொழும்பு

**23-9-80 செவ்வாய்க்கிழமை (இன்று)**

வழமையான இரவு 8 மணி

**ஆடம்பர பஸ் சேவையுடன்**

இரவு 9 மணிக்கும்

**விசேஷ பஸ் சேவை உண்டு.**

குறிப்பு: ஒவ்வொரு ஞாயிற்றுக்கிழமைகளிலும் வழமையான இரவு 8 மணி சேவையுடன் இரவு 9 மணி சேவையும் உண்டு.

69?7

## ஆனேக்கோட்டை, உயரப்புலம் உத்துங்க விநயகர் ஆலயத்தில் வழிபடுவோர்களுக்கு

# ஒரு முக்கிய அறிவித்தல்

ஆனேக்கோட்டையைச் சேர்ந்த இராசநாயகம் சின்னேயா ஆகிய நான் என்னல் பராமரிக்கப்பட்டும், நிர்வகிக்கப்பட்டும் வந்த மேற்படி விநாயகர் ஆலய நிர்வாகத்தையும் பரிபாலனத்தையும் 1977-ம் ஆண்டு ஆடி மாதம் 2-ந் திகதி யாழ்ப்பாணம் பிரசித்த நொத்தாரிஸ் மு.. சபாநாதன் முகதாவில் நிறைவேறிய 3?6-ம் இலக்க நம்பிக்கை பொறுப்புச் சாதனத்தில் கண்டுள்ள நிபந்தனைகளுக்கு அமைய ஒரு நிர்வாகசபையிடம் ஒப்படைத்தேன். சமீப காலங்களில் இந்த நிர்வாகத்திலும் இவர்களின் நடவடிக்கைகளிலும் நான் திருப்தி அடையாத காரணங்களினல் மேற்கூறிய நம்பிக்கைப் பொறுப்புச் சாதனத்தை நான் சட்டப்படி அழித்து வலுவற்றதும் செல்லுபடியாகாததும் ஆக்கிவிட்டேன் என்றும், மேலும் இந்த ஆலயத்தின் பரிபாலனத்தையும் நிர்வாகத்தையும் நானே பொறுப்பேற்று எனது மகனகிய ஆனேக்கோட்டையைச் சேர்ந்த இராசநாயகம் சின்னேயா குமாரசாமி என்பவரை இந்த ஆலயத்தின் ஏக தர்மகர்த்தா ஆக்கி இவரிடமே இவ்வாலய பரிபாலனம், நிர்வாகம் போன்ற சகல பொறுப்புக்களேயும் ஒப்படைத்துள்ளேன் என்றும் அறியத்தருகிறேன்.

மேலும் இவ்வாலயத்தில் இனிமேல் வழிபடுதலேத் தவிர்ந்த ஏனைய கருமங்களான கூட்டம் கூட்டுதல், சமயச் சொற்பொழிவுகள், திருமண வைபவங்கள் போன்றவற்றை நடத்த விரும்புபவர்கள் யாராக இருந்தாலும் எற்கனவே திரு. குமாரசாமியுடன் தொடர்பு கொண்டு அவரின் சம்மதத்தையும் அனுமதியையும் பெற்றே இவற்றைச் செய்யலாம் என்றும் அறியத்தருகிறேன்.

இராசநாயகம் சின்னேயா.

ஆனேக்கோட்டை,
23-9-1980.

69?6

# அமைச்சர் 'இராசு' மன்னர் விஜயம் செய்வார்

(மன்னர்)

பிராந்திய இந்து கலாச்சார அபிவிருத்தி அமைச்சர் திரு. செ. இராசதுரை மன்னருக்கு 3 நாள் விஜயம் மேற்கொள்ளவுள்ளார்.

இம் மாதம் 27, 28, 29-ம் திகதிகளில் அமைச்சர் இங்கு விஜயம் செய்வார் என அறியப்படுகிறது.

இங்கு வரும் அமைச்சர் 'இராசு' திருக்கேதீஸ்வரம், பேசாலே முருகன் ஆலயங்களுக்குச் சென்று தரிசிப்பதோடு மன்னர் சிறுவர் விளேயாட்டரங்கில் நடைபெறவிருக்கும் திருமுறை விழாவிலும் கலந்து கொள்வார் என எதிர்பார்க்கப்படுகிறது. (அ)

# மன்னர்க் கடலில் எண்ணெய்வள ஆய்வு

(மன்னர்)

மன்னர்க் கடற் பிராந்தியத்தில் விரைவில் எண்ணெய் வளம் பற்றிய ஆய்வுகள் நடைபெறவுள்ளன. இதற்கான பூர்வாங்க ஏற்பாடுகள் நடைபெற்று வருகின்றன.

அமெரிக்க நிறுவனம் ஒன்று இந்த ஆய்வுகளை நடத்துமெனத் தெரியவருகிறது. இதன் முதல் கட்டமாக மன்னரைஅடுத்துள்ளஒலேத்தொடுவாயை அடுத்துள்ள கடல் பிரதேசத்திலிருந்து சிலாவத்துறை, குதிரைமலே கடல் பிரதேசம் வரை எண்ணெய்வள ஆய்வு நடைபெறுமென அறியப்படுகிறது. (அ)

## மேலும் இரு வங்கிக் கிளேகள்

(மன்னர்)

மன்னர் மாவட்டத்தில் மேலும் இரு இலங்கை வங்கிக் கிளேகள் திறக்கப்படவிருக்கின்றன. முருங்கன், உயிலங்குளம் ஆகிய இடங்களில் இக்கிளேகள் திறக்கப்படும். இதற்கான பூர்வாங்க வேலேகள் துரிதகதியில் நடைபெற்று வருகின்றன. (அ)

## ஆசிரியை வீட்டில் பகல் திருட்டு

(டண்டத்தரிப்பு)

பட்டப்பகலில் ஆசிரியையொருவரின்வீட்டில் உட்புகுந்த திருடர்கள் அங்குஅலுமாரியில் வைக்கப்பட்டிருந்த சுமார் 10ஆயிரம் ரூபா பெறுமதிமிக்க தங்க நகைகள், புடைவைகள் ஆகியவற்றைக் கொள்ளேயடித்துச் சென்ற சம்பவம் டண்டத்தரிப்பில் நடைபெற்றுள்ளது.

வீட்டின் சொந்தக்காரரான ஆசிரியையும், அவரதுமகனும் பாடசாலே சென்றிருந்த நேரம் பார்த்து சுவரேறி உட்புகுந்த திருடர்கள் மிகவும் சாதுரியமானமுறையில் இத்திருட்டை செய்துள்ளனர். திருமதி சரஸ்வதி சரவணமுத்து என்றபிரஸ்தாப ஆசிரியை, சங்கானேப் பொலிஸ் நிலேயத்தில் செய்த முறைப்பாட்டை அடுத்து பொலிஸ் நிலேய சப் இன்ஸ்பெக்டர் திரு. சார்லி குணசேன தலேமையில் ஸ்தலத்திற்குச் சென்ற பொலிஸ் கோஷ்டி விசாரணை நடத்தியது. இதுவரை எவரும் கைது செய்யப்படவில்லே. (அ)

## ரியூட்டறி மாணவி காதலனுடன் தலேமறைவு

(பண்டத்தரிப்பு)

தனியார் கல்வி நிலேயத்தில் கல்வி கற்கச்சென்ற தமது 19வயது மகள் வீடு திரும்பவில்லேயென்றும் அவரைத் தேடிக் கண்டு பிடித்துத்தருமாறு சங்கானேப் பொலிஸ் நிலேயத்தில் தந்தை ஒருவர் புகார் செய்தார்.

ஆனல் காணமல் போன பிரஸ்தாப யுவதி தமது காதலன் சகிதம் பொலிஸ் நிலேயம் வந்து தாங்கள் இருவரும் காதலர்கள் என்றும் விரைவில் தாங்கள் திருமணம் செய்து கொள்ளப்போவதாகவும்தமது பெற்றோருடன் செல்லவிரும்பவில்லே என்றும் பொலிசாருக்கு தெரிவித்து, பொலிஸ் பதிவுப் புத்தகத்தில் கையொப்பம் வைத்துவிட்டு சென்றுள்ளதாகப்பொலிசார் தெரிவித்தனர். (அ)

## 3போட்டிகளிலும் முதலிடம்

(யாழ்ப்பாணம்)

கடந்த 16ம் திகதி வவனியா மாவட்டத்தில் நடைபெற்ற சங்கீத நடன நாடகப் பாட்டிகளில் புதுக்குளம் கனிஷ்ட உயர்வித்தியாலயம் நாட்டுக் கூத்து, நாட்டுப்பாடல், புதிய ஆக்கம் ஆகிய மூன்றுபோட்டிகளிலும் முதலிடம் பெற்று அகில இலங்கைப் போட்டிக்கு தெரிவாகியுள்ளது. (அ)

## வியாபாரம் பெருக விளம்பரம் செய்க

## 1–வது ஆண்டு நினைவாஞ்சலி

### திரு. வேலுப்பிள்ளே மருதமுத்து

(பவுண் புரோக்கர்)

தோற்றம் :
1912-08-12

மறைவு :
1979-10-04

அன்புத்தெய்வமே!

ஓராண்டு பூர்த்தியாகும் இந்த நாளில் (23 9-80) உங்கள் ஆத்மா சாந்தியடைய வேண்டி நிற்கிறோம்



மனைவி, பிள்ளேகள்
142, நாவலர் வீதி,
யாழ்ப்பாணம்.

6908

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

### மணிவாக்கு

கடவுள் உன்னை இந்த உலகுக்குத் தந்தார். நீஎன்ன செய்யப்போகிறாய்! உன்னை அவனிடம் ஒப்புக்கொடு சகலதையும் அவன் பாதங்களில் சமர்ப்பித்துவிடு. பின்னர் எதுவித குழப்பமும் இராது. சகலதும் அவனால் செய்யப்படுவதை உணர்வாய்.

-பகவான் ராமகிருஷ்ணர்

## நமது நோக்கு

### சோதனைக்கு மேல் சோதனை

பல்கலைக்கழக அனுமதி தேடி அலையும் மாணவர்களைப் பிடித்த சனியன் அவர்களை விரைவில் விட்டபாடில்லை.

கடந்த ஏப்ரில், ஆகஸ்ட் மாதங்களில் நடந்த பரீட்சைகளின் விடைத்தாள்கள் பட்டாசு உற்பத்திக்கு மூலப்பொருளாகப் போய்ச்சேர்ந்திருப்பதாக பொலிசார் கண்டுபிடித்திருக்கின்றனர். இருந்தாத நிலையில் இவ்விடைக்காளுக்கு இவ்வளவு கிராக்கியிருப்பது வியப்பல்ல.

எத்தனை கடினமான, ஊக்கமான உயர்கல்வியின் வடித்தெடுத்த இரசம் இவ்விடைத்தாளில் உண்டு என்பதை மாணவர்கள், ஆசிரியர்கள், பிரத்தியேக டியூஷன் மாஸ்டர்கள், பெற்றோர் நன்கறிவர். இவ்வளவு உருவேறின இரசாயன வஸ்துக்களில் வெடிமருந்தேதேன்றால் அது ஒரு நாட்டையே அழித்துவிடும் சக்தியுடையது.

இவ்வித நூற்றுக்கணக்கான 'அணுகுண்டுகள்' சாக்குகளில் விற்கப்பட்டுள்ளன. இந்த விடைத்தாள்கள் பல விளுக்களை எழுப்பியிருக்கின்றன. இவை எங்கிருந்து வெளியேறின? இவற்றின் இடத்தை நிரப்பப் பிரதிவிடைத்தாள்கள் பரீட்சைத்திணைக்களத்துள் பிரவேசித்துள்ளனவா? அல்லது இது நாசவேலையா? கண்டியில் கடலைக்காரரிடம் சிலவற்றைக் காணலாம் என்ற தகவலில் பொலிசார் அங்கு விரைந்திருக்கிறார்கள்.

எனவே போட்டி மிகுந்த சோதனையிலும் பார்க்க மிகப் பெருந்த சோதனையாக இப்பரீட்சையில் சம்பந்தப்பட்ட எல்லோருக்கும் இது அமைகிறது.

பரீட்சைத் திணைக்களத்துக்கு இது தண்ணீர் பட்டபாடு. கல்வி அமைச்சுக்கும் இவ்வித திடீர் சம்பவம் காலத்துக்குக்காலம் நடைபெறும் 'திருவிழா'க்களில் ஒன்றாகும். விசாரணையும்-அறிக்கையும் மறுவிசாரணையும் மறுஅறிக்கையும் சர்வசாதாரணம்.

ஆனால் மாணவர்களின் கதி என்ன? 1971ல் நடைமுறைக்கு வந்த தரப்படுத்தல் தொடக்கம் 'பூனைக்குக்கொண்டாட்டம் எலிக்குத் திண்டாட்டமே' யாயிருக்கிறது. சடந்தகாலத்தில் பாராளுமன்றத்தில் விடைத்தாள்கள்பற்றி ஒரு குற்றச்சாட்டை எழுப்பியதும் அது நீண்ட சூடான விவாதத்தைப் பெருக்கியதும் வாசகர்களுக்கு நினைவிருக்கலாம். சென்ற வருடம் நடந்த பரீட்சை முடிவுகள் பற்றியும் பல்கலைக்கழக அனுமதி பற்றியும் இன்னுமொரு முடிவோ, விடிவோ கிட்டவில்லை. உயர்நீதிமன்றத்தில் நடைபெறும் வழக்கின் முடிவை அதிகாரிகள் காத்திருக்கின்றனர்.

எனவே இந்த மிகமுக்கியமான பரீட்சைக்கு ஏழரைச் சனியன் பிடித்திருக்கலாம். அப்படியாயின் அது நீங்கும் காலமாகிவிட்டது. பல்லாயிரம் மாணவர்களின் பரீட்சைகளை ஒரு மத்திய ஸ்தாபனம் எவ்வித குறையுமின்றி நடத்தி முடிப்பது எவ்வளவு கடினமான காரியம் என்பதை நாம் அறியாதிருக்கவில்லை. ஆனால் தெய்வநீதி என்று ஒன்றிருக்கிறதை எவரும் மறந்துவிடலாகாது.

எத்தனை மாணவர் எவ்வித தகைமையுமின்றி தரப்படுத்தலாலும், பரீட்சைத் திணைக்களத்தில் நடைபெறும் ஒழுங்கீனங்களாலும் முன்னேறிவிட்டனர். எத்தனை தகைமை மிகுந்த மாணவர் தரப்படுத்தலாலும், இன்றைய நவீன மாவட்ட பின்தங்கிய திறமைகளாலும் பாதிக்கப்பட்டு வருகின்றனர்!

கைப்புண்ணுக்குக் கண்ணாடி வேண்டுமா? தர்மம் தலைகாக்கும் என்ற நம்பிக்கைகொண்ட அரசும், அதன் நீதிமன்றமும் இவ்வித அதர்மச்செயல்களுக்கு முற்றுப்புள்ளி வைக்கவேண்டுமெனப் பிரார்த்திப்போமாக!

"மாவட்ட அபிவிருத்திக்கு

# இயற்கைவளங்களை ஏற்றவாறு பயன்படுத்தவேண்டும்"

## பேராசிரியர் ஜெயசிங்கம் வேண்டுகோள்

(யாழ்ப்பாணம் (மட்டுவில்)

''மாவட்ட அபிவிருத்திச் சபை வரப்போகிறது. அதன் மூலம் எமது அபிருத்தி வேலைகளை நாமே செய்ய வேண்டும். இதற்கு இயற்கை வளங்களை, எமது அபிருத்திக்கு ஏற்றவாறு பயன்படுத்த வேண்டும். இதற்கு ஏற்றவாறு மாணவர்களுக்குப் பாடசாலைகள் அறிவு வளர்ச்சியை அளிக்க வேண்டும்''

இவ்வாறு யாழ். பல்கலைக்கழகப் புவியியல் துறைப்பேராசிரியர் திரு. லூதர் ஜெயசிங்கம் சாவகச்சேரி இந்துக் கல்லூரி வருடாந்தப் பரிசளிப்பு விழாவில் பிரதம விருந்தினராகக் கலந்து கொண்டு உரை நிகழ்த்தும்போது கூறினர்.

கல்லூரி அதிபர் திரு. பூ. வெற்றிவேறு தலைமையில் நடைபெற்ற இந்த விழாவில் திருமதி ஜெயசிங்கம் பரிசில்களை வழங்கினர். அதிபர் கல்லூரி ஆண்டறிக்கையைச் சமர்ப்பித்துப் பேசியதை அடுத்து பேராசிரியர் திரு. லூதர் ஜெயசிங்கம் தொடர்ந்து பேசினர். அவர் தமது உரையில் கூறியதாவது:

''அரச உத்தியோகங்களுக்கு ஏற்ப மாணவர்களை உருவாக்குவது மட்டும் தான் கல்லூரிகளின் கடமை என்ற நிலையை மாற்றி, நமது நாட்டு அபிவிருத்தித் துறைக்கு வேண்டிய அறிவை, ஆற்றலை, ஆய்வுத்திறனை மாணவர்களுக்குப் புகட்டுவதற்குக் கல்வி நிலையங்கள் முன்வரவேண்டும். மீன்பிடித்துறையில், பனை, தென்னை வள உற்பத்தியில் இதுபோன்ற இன்னோரன்ன அம்சங்களில் மாணவர் அறிவு வளரப் பயிற்சி கொடுக்கப்பட வேண்டும்''

மாணவர்களின் கதம்ப நிகழ்ச்சிகளும் இடம் பெற்றன. (ஈ)

# வல்லிபுர ஆழ்வார்

ஈழத் திருநாட்டிலே நாராயணனுக்குப் பல கோயில்கள் உண்டு. ஈழத்தின் வடபகுதியில் சிறப்பாக அமைந்த விஷ்ணு ஆலயங்கள் மூன்று. அவற்குள் வங்கக் கடற்கரைக்கு அண்மையில் வடமராட்சியைச் சேர்ந்த துன்னாலையில் அமைந்த வல்லிபுர ஆழ்வார் கோயிலும் ஒன்று.

இக்கோயிலின் சூழலிலே இயற்கையின் எழில், இதயத்தை ஈர்க்கும் வகையில் மிளிர்கின்றது. அலைகடலில் இருந்து எழுந்துவரும் தென்றல் அடியார்களின் மேனியைத் தழுவ, அழகிய பரந்த வெண் மணற்பரப்பு, பக்தனின் உள்ளம் விரிந்து பரந்து தூய்மை உற்றதாக விளங்க வேண்டுமென்பதற்கு எடுத்துக் காட்டாகத் திகழ்ந்து, உள்ளத்தை ஏகாந்த நிலைக்கு இட்டுச் செல்கிறது. ஓங்கி உலகளந்த உத்தமன் பேர் பாடவேண்டுமென்ற உன்னத உணர்வு எழச் செய்கிறது.

''நாடெங்கும் வாழக் கேடு ஒன்றும் இல்லை.'' நாடு செழித்திட, நலம் பொங்கிட நாராயணன் அருள் அமுதத்தைப் பொழிகின்றான். கோயிலைச் சூழவுள்ள கிராமங்கள் சிருடனும், சிறப்புடனும் திகழ்கின்றன.

மூர்த்தி, தலம், தீர்த்தம் மூன்றும் ஒருங்கமைந்த புகழ் வாய்ந்த திருத்தலமாம் வல்லிபுர ஆழ்வார் கோயிலைப் பற்றிய கர்ண பரம்பரைக் கதை ஒன்று உண்டு.

### 'கரவை கிழார்'

பல நூற்றாண்டுகளுக்கு முன் பங்கம் விளையப்போகிறதேயெனப் பலரும் அஞ்ச, வங்கக் கடல் பொங்கியது. மலைகள் புரண்டு வருவது போன்று அலைகள் புரண்டு கரையிலே மோதின. வள்ளங்களை எற்றி எற்றி அலைக்கழித்தன. மீனவரின் உள்ளங்கள் வேதனையால் விம்ம, மீன்பிடி வலைகள் அறுபட்டுச் சின்னபின்னமாகின. அவலம் அரசோச்சியது. பெரிய மீன் ஒன்றே இப்பயங்கரச் செயலைப் புரிந்துகொண்டிருந்தது. மீனவர்கள் செய்வதறியாது திகைத்தனர்; திக்குமுக்காடினர். ''மாதவா, முகுந்தா, மாயவா, கிருஷ்ணா, அச்சுதா அபயம்தருவாய்'' எனக் கதறி அழுதனர்.

அதேவேளையில் வராத்துப்பளைக் கிராமத்திலே மங்கை நல்லாள் ஒருத்தி வல்லிநாச்சியார் என்னும் பெயருடையாள் மனமுருகி மாதவனை நாளாந்தம் நினைந்து, நினைந்து பாடிப்பரவி வணங்கி வரம் கேட்டாள்.

''கோபாலா! கோதை என் குறை தீர்க்கமாட்டாயா? மணமுடித்துப் பல ஆண்டுகள் ஆகின. மகப்பேறு இதுநாள் வரை பெற்றிலேன். மலடி, மலடி என்று அயலவரும், உற்றாரும், மற்றையோரும் என்னை வைகின்றனரே வைகுந்தா! தேவகி மைந்தா! கோபாலகிருஷ்ணா, கோகுலத்து மங்கையர்களின் மனம் மகிழவைத்தவா! இந்த அபலையின் வேண்டுகோளைச் செவிமடுக்க மாட்டாயா? நான் மலடியாகவே மடிய வேண்டுமா? எனக்கு மகப்பேறு தரமாட்டாயா தாமோதரா!'' எனக் கதறிக்கதறிக் கண்ணனை வேண்டினாள். களைப்பின் மிகுதியால் கண்ணயர்ந்து தூங்கிவிட்டாள். கண்ணன் கனவிலே தோன்றினான்.

(7-ம் பக்கம் பார்க்க)

# தமிழ்க்காங்கிரஸ் செய்த முடிவு ஏகமனதானதல்ல!

20-09-1980 சனிக்கிழமை அகில இலங்கைத் தமிழ்க்காங்கிரஸ் கட்சியின் உப தலைவர் எஸ். ஆர். கனகநாயகம் தலைமையில் நிர்வாகசபைக் கூட்டம் நடைபெற்றது. அக்கூட்டத்தில் தமிழ்க் காங்கிரசின் முதுபெரும் தலைவர்களும், முக்கிய உறுப்பினர்களும், முஸ்லிம் உறுப்பினர்களும், வாலிப முன்னணி உறுப்பினர்களும் கலந்துகொள்ளவில்லை. அக்கூட்டத்தில் 20 பேர்மட்டில் கலந்துகொண்டனர். அதில் நிர்வாகசபை உறுப்பினர்களும் அல்லாதவர்களும் மாவட்ட அபிவிருத்திச் சபைத் தேர்தலில் போட்டியிட அபேட்சகராக நிற்கக் கங்கணம்கட்டியவர்களும், 'கட்சியின் அங்கத்தவர் இல்லாதவர்களும் பங்குபற்றினர். அப்பொழுது பொதுச் சபையைச் சேர்ந்த

### மக்கள் கருத்து

அங்கத்தவர்களும், வாலிப முன்னணி அங்கத்தவர்களும் கூட்டத்தில் கலந்துகொள்ளாமல் வெளியில் நின்றார்கள். அக்கூட்டத்தின் நிகழ்ச்சி நிரலில் கொக்குவில் தமிழ்க்காங்கிரஸ் வாலிப முன்னணிச் செயலாளர் சின்னையா சுப்பிரமணியம், காங்கிரஸ் பிதா ஜி. ஜி. பொன்னம்பலத்தின் கொள்கைக்கமைய அபிவிருத்திச் சபைத் தேர்தலில் போட்டியிடாது பகிஷ்கரிக்கவேண்டுமென கட்சியின் தலைமைப் பீடச் செயலாளருக்கு விண்ணப்பித்த கடிதம் பரிசீலனை செய்யப்பட்டபொழுது நிர்வாகசபை உறுப்பினர்கள் அல்லாதவர்களும், தேர்தலில் போட்டியிட கங்கணம் கட்டியவர்களும், அன்று அமரர் ஜி. ஜி. அரசியல் பாதைக்குத் தடையாய் நின்றவர்களும் அவ்வேண்டுகோளைக் கடுமையாகக் கண்டித்தனர். அதன் பின் வாக்கெடுப்பிற்கு விட்டபோது 15 பேர்மட்டில் எதிராகவும் 5 பேர்மட்டில் ஆதர

(7-ம் பக்கம் பார்க்க)

## நாடும் நடப்பும்

இலங்கை மக்களுக்கு சர்வஜன வாக்குரிமை கிடைத்து ஐம்பதாண்டுகளாகின்றன. அடுத்த வருடம் அதாவது 1981ம் ஆண்டில் சர்வஜன வாக்குரிமை கிடைத்த பொன்விழாவை இலங்கையில் சிறப்பாகக் கொண்டாடுவதற்கு ஏற்பாடுகள் நடைபெற்று வருகின்றன. நிச்சயம் கொண்டாடப்படவேண்டியது தான்.

ஆனால் இலங்கை வாழ் தமிழ் பேசும் மக்களைப் பொறுத்த வரையில் ஒருவருக்கு ஒருவாக்கு என்ற உரிமை என்ன நன்மையைச் செய்திருக்கிறது. இந்த சர்வஜன வாக்குரிமை பெரும்பான்மை ஜனநாயகத்தைத்தானே உருவாக்கியிருக்கிறது! சிறுபான்மையினருக்கு இதனால் என்ன இலாபம்?

சர்வஜன வாக்குரிமை பற்றி பரிசீலனை செய்யக் கூடாதா?

ஃ ஃ ஃ

பரீட்சை விடைத்தாள்கள் பட்டாசு தயாரிப்பதற்கு விற்பனை செய்யப்பட்டிருப்பது தான் இப்போது எங்கு பார்த்தாலும் பேச்சாக இருக்கிறது. விற்பனை செய்யப்பட்ட விடைத் தாள்கள் யாவும் தமிழ் மொழித்தாள்கள் இன்னும் ஆச்சரியம். தமிழ் விடைத்தாள்கள் வேகம் கூடியவை போலும்! சீறுவதிலும் வெடிப்பதிலும் அவற்றுக்குச் சக்தி அதிகமோ!

எத்தனை கஷ்டப்பட்டு கண் விழித்துப் படித்து எழுதிய விடைத்தாள்கள் கடலைக் கடைக்கும் பட்டாசுத்தொழிற்சாலைகளுக்கும் விற்பனைசெய்யப்பட்டிருப்பின் இதுமன்னிக்கக் கூடிய விஷயமல்ல. இதற்கு யார் காரணமாக இருந்தாலும் பரீட்சைப் பகுதியில் விடைத்தாள்களுக்குப் பொறுப்பான அதிகார வர்க்கத்தினர் தமது பொறுப்பைத் தட்டிக்கழிக்கவே முடியாது.

விடைத்தாள்கள் பரீட்சைக்கு முன்னரே வெளிவருவது; விடைத்தாள்கள் காணாமல் போவது இலேசான விஷயமல்ல. பரீட்சைகள் நடைபெறுவதாயின் ஒழுங்கான முறையில் நடைபெற வேண்டும்; இல்லையேல் பரீட்சைகளையே இல்லாமல் செய்துவிடவேண்டும்.

வருடத்தில் தவணைப் பரீட்சைகள் பாடசாலைகளில் நடைபெறுகின்றன. இவற்றைக் கணக்கில் எடுக்காது ஆண்டின் இறுதியிலோ இடையிலோபரீட்சைத்திணைக்களம் நடத்தும் பரீட்சைகள் தான் இறுதிமுடிவாக ஏற்றுக் கொள்ளப்படுகிறது. இதனால் தான் பரீட்சைகளில் ''குதிரையோட்டங்களும்'' வினாத்தாள்கள் வெளிவருவதும் போன்ற ஊழல்கள் இடம்பெறுகின்றன. இப்போது விடைத்தாள்களுக்கே மோசடி! என்ன அநியாயம்!

பரீட்சை முறைகளில் மாற்றம் தேவை: அதற்கு முன் கல்வி முறையிலேயே மாற்றம் அவசியமாகத் தோன்றுகிறது.

கல்விமான்கள் இவை பற்றிச் சிந்தித்து அரசுக்கு ஆலோசனை கூற வேண்டிய காலம் வந்து விட்டது.

ஊர்சுற்றி

### கும்பிட்டால் வினை ஏகும்

வல்லிபுரக் கோவில் வலம்வந்து கும்பிட்டால்
எல்லா வினைகளுமே ஏகிவிடும்—வல்லகுரு
நாதன் நமக்கருள்வான் நல்லவழி காட்டிடுவான்
வேதனைதான் என்ன விடு.

— எஸ். வி. எஸ். சிதம்பரநாதன்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கைதடியில் ஆயுள்வேதக் கல்லூரி நிறுவவேண்டும்

## அரசைக்கோரும் பிரேரணை

## யாழ். மாநகரசபைக்கு வருகிறது

(யாழ்ப்பாணம்)

கைதடி ஆயுள்வேத வைத்தியசாலையில் சித்த ஆயுள்வேதக் கல்லூரி ஒன்றை அரசு நிறுவ நடவடிக்கை எடுக்கவேண்டுமென்று அரசைக் கோரும் பிரேரணை ஒன்றை யாழ். மேயர் திரு. இராஜா விசுவநாதன், யாழ். மாநகரசபைக் கூட்டத்தில் சமர்ப்பிக்கவுள்ளார்.

இம்மாதம் 30ந் திகதி நடைபெறவுள்ள சபையின் மாதாந்தக் கூட்டத்தில் சமர்ப்பிக்கப்படவுள்ள பிரேரணை விபரம் வருமாறு:

"தற்பொழுது யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தின் மருத்துவபீடம் இடங்கொண்டிருக்கும் கைதடி ஆயுள்வேத வைத்தியசாலையின் அப்பாகம் வைத்தியபீடம் திருநெல்வேலியில் புதிய கட்டிடத்திற்கு இடம்பெயர்ந்ததும் ஆயுள்வேத வைத்தியசாலைக்கே திரும்ப ஒப்படைக்கப்பட வேண்டும், அத்துடன் சித்த ஆயுள்வேதக் கல்லூரி ஒன்றை அரசு நிறுவ நடவடிக்கை எடுக்கவேண்டும்.

யாழ்ப்பாண மாவட்டத்தில் நிறுவப்பட்டுள்ள ஒரே ஒரு ஆயுள்வேத வைத்தியசாலை பொதுமக்கள், நோயாளரால் நன்கு ஆதரிக்கப்படாத காரணத்தினால் மூடுவிழாவை எதிர்நோக்கும் ஆபத்து அதனைச் சூழ்ந்திருப்பது குறித்து வருத்தம் தெரிவிக்கும் இச்சபை, மாவட்டத்தின் மத்திய பகுதியான கைதடியில் அமைந்திருக்கும் மேற்படி வைத்தியசாலை அளித்துவரும் இலவச சிகிச்சையை நன்கு பயன்படுத்துமாறு பொதுமக்களைக் கேட்டுக்கொள்கிறது.

கைதடி ஆயுள்வேத வைத்தியசாலையின் தற்போதைய வைத்திய அத்தியட்சகரின் சிறந்த நிர்வாகத்தின் கீழ் அதன் சேவைகளைப் பொது மக்களும், சிறப்பாக நோயாளர்களும் நல்லபடி பயன்படுத்த உதவுமுகமாகத் தமிழ் பேசத் தெரிந்தவர்களையே மேற்படி வைத்தியசாலையில் சிறு தொழில் ஊழியர்களாக நியமிக்கப்பட வேண்டுமெனச் சுகாதார அமைச்சரைக் கேட்டுக்கொள்ளுகின்றது.

யாழ்ப்பாண மாவட்டத்திலுள்ள உள்ளூராட்சி மன்றங்கள் நடத்தும் ஆயுள்வேத வைத்தியசாலைகளில் சிகிச்சை பெற வருபவர்களை வெளிநோயாளர்களாக வைத்தே சிகிச்சையளிக்கும் வாய்ப்பு இருப்பதால், அங்ஙனம் சிகிச்சைக்கு வருபவர்களில் உள்ளகச் சிகிச்சை வேண்டப்படும் நோயாளர்களைக் கைதடி ஆயுள்வேத வைத்தியசாலைக்கு ஆற்றுப்படுத்தும்படி தமக்குக் கீழ் பணியாற்றும் ஆயுள்வேத வைத்தியர்களைச் சம்பந்தப்பட்ட உள்ளூராட்சி மன்றங்கள் பணிக்கவேண்டும். (இ)

மாவை - கலட்டி மக்கள்

## குடிநீர் திட்டத்திற்கு ஒன்றரைலட்சம்ரூபா ஒதுக்கீடு

(பலாலி)

மாவை-கலட்டி மக்களின் நீண்டநாள் பிரச்சினையாகவிருந்த குடிநீர் விநியோகத்தைத் தீர்த்துவைக்க காங்கேசன்துறை எம். பி.யும், எதிர்க்கட்சித் தலைவருமான திரு. அ. அமிர்தலிங்கம் முன்வந்துள்ளார். இதற்கெனப் பன்முகப்படுத்தப்பட்ட வரவு-செலவுத் திட்டத்திலிருந்து ஒன்றரை லட்சம் ரூபா ஒதுக்கப்பட்டதுடன், குடிநீர் வழங்கலுக்கான ஆரம்ப வேலைகளும் நடைபெறுகின்றன.

தேசிய நீர்வழங்கல் சபையால் மேற்கொள்ளப்படும் இத்திட்டம் 5 மாதத்தில் பூர்த்தியாகும். இதனால் 125 குடும்பங்கள் நன்மையடைவிருக்கின்றன. ஒவ்வொன்றும் 400 கலன் கொள்ளக்கூடிய 4 நீர்த் தாங்கிகள் அமைப்பதன் மூலம் நீர் வழங்கப்படவிருக்கிறது.

மேற்படி திட்டத்தை மேலும் விஸ்தரிக்கும்படியும் நீர் வழங்குவதற்குப் பாவிக்கும் டீசல் யந்திரத்தை மின்சாரத்தின் மூலம் மேற்கொள்ளும்படியும் மாவை கலட்டிப் பகுதிக்கு மின் இணைப்பு செய்து தரும்படியும் மாவை கலட்டி காந்தி சனசமூக நிலையம் எதிர்க்கட்சித்தலைவரை கோரவிருக்கிறது. (ஈ)

## கணவனின் காணிஆசை மனைவியைவிதவையாக்கியது

(பண்டத்தரிப்பு)

காணி ஒன்றை விலைக்கு வாங்குவதற்காக அடைவு வைத்துப் பணம் எடுக்கத் தமது மனைவியின் நகைகளைத் தருமாறு கேட்டாராம் கணவர். மனைவி தமது நகைகளை கொடுக்க மறுக்கவே மனமுடைந்த கணவர் கிருமிநாசினி அருந்தித் தற்கொலை செய்துகொண்டார். இப்பரிதாபசம்பவம் சங்கானையில் நடைபெற்றுள்ளது. சங்கானை கிழக்கைச்சேர்ந்த கணபதிப்பிள்ளை துரைராசா (44 வயது) என்பவரே இவ்வாறு தன்னுயிரை மாய்த்துக்கொண்டவராவார். இவரது மரணவிசாரணை திடீர் மரணவிசாரணை அதிகாரியும் உத்தியோகப்பற்றற்ற நீதிபதியுமான திரு. கே. சேனாதிராசா முன்னிலையில் நடைபெற்றது. அத்தருணம் இறந்தவரின் மனைவியான திரு பாலின்தேவி (வயது 31) சாட்சியமளிக்கையில், காலம் சென்ற தமது கணவர் காணி ஒன்றை விலைக்கு வாங்குவதற்கு முயற்சிசெய்ததாகவும் காசு பற்றாமல் இருந்ததினால் தமது நகைகளை அடைவுவைத்துப் பணம் எடுப்பதற்காக தருமாறு கேட்டதாகவும், தான் அதற்கு மறுத்ததாகவும் பின்னர் தமது மகனிடம் 'உனது அம்மா நகைகளைத் தர மறுத்துவிட்டார், இனி நான் உயிருடன் இருப்பதில் பிரயோசனமில்லை' என்று கூறி விட்டு சென்றதாகவும், பிற்பகலில் அவர் கிருமிநாசினி அருந்திய நிலையில் தேவாலயத்திற்குச் சமீபமாகக் கிடப்பதாக அயலவர்கள் கூறியதைக் கேட்டு ஓடிச்சென்று பார்த்துவிட்டு அவரை வைத்தியசாலைக்கு எடுத்துச்செல்ல முயற்சித்தபோது உயிர்பிரிந்துவிட்டதாகவும் தெரிவித்தார். காலம்சென்றவரின் மகன் விவேகானந்தராசாவும் சாட்சியமளித்தார். சங்கானைப் பொலிசார் சாட்சிகளை ஆஜர் செய்தனர். விசாரணை முடிவில் மரணவிசாரணை அதிகாரி தற்கொலை எனத் தீர்ப்புவழங்கினார். (அ)

## சாராயம் காய்ச்சினோர்: 1250 ரூபா அபராதம்

(பண்டத்தரிப்பு)

சட்டவிரோதமான முறையில் வீட்டில் வைத்துச் சாராயம் காய்ச்சியதாகக் குற்றம் சாட்டி, சங்கானைப் பொலிசாரினால் மல்லாகம் மாவட்ட நீதிமன்றத்தில் ஆஜர்செய்யப்பட்ட பண்டத்தரிப்பு வாசி ஒருவருக்கு நீதிபதி 1250 ரூபா அபராதம் விதித்தார்.

பண்டத்தரிப்புப் பகுதியில் உள்ள வீடொன்றில் வடி சாராயம் காய்ச்சப்படுவதாக சங்கானைப் பொலிசாருக்குக் கிடைத்த இரகசியத் தகவல் ஒன்றை அடுத்து சப்-இன்ஸ்பெக்டர் திரு. சார்லி குணசேன தலைமையில் சென்ற பொலிஸ்கோஷ்டி திடீர்சோதனையில் ஈடுபட்டபோது பிரஸ்தாப வீட்டில் வடிசாராயம் காய்ச்சப்படுவதைக் கையும் மெய்யுமாகக் கண்டுபிடித்தனர். அங்கு 64 இறும் வடி சாராயத்தையும் மற்றும் உபகரணங்களையும் கைப்பற்றியதுடன் சுவக்கீன் என்பவரையும் கைதுசெய்தனர். இந்நபரை சங்கானைப் பொலிசார் மல்லாகம் மாவட்ட நீதிமன்றத்தில்ஆஜர்செய்தபோது நீதிபதி திரு. சி. ஆர். இராசசிங்கம், ரூபா 1250 அபராதம் விதித்து உபகரணங்களையும் பறிமுதல்செய்யுமாறு உத்தரவிட்டார்.

## திருட்டு வழக்கில் எதிரிகள் விடுதலை

(வவனியா)

திருட்டு வழக்கில், 10 மாதங்கள் றிமாண்டில் வைக்கப்பட்டிருந்த இருவர் வழக்காளி கோர்ட்டிற்கு வராததினால் விடுதலை செய்யப்பட்டனர்.

இவ்வழக்கு வவனியா மாவட்ட நீதிமன்றத்தில் பதில் நீதவான் திரு. பி. என். ஜெிரனேல்ட் முன்னிலையில் நடைபெறற்து.

இவ்வக்கில் வவனியா பஸ் நிலையத்தில் 79 நவம்பர் மாதம் ஒருவரிடமிருந்து 10 ரூபா 50 சதம் கொண்ட கடித உறையைத் திருடியதாக ஐ. ஜயவீர என். எம். ரட்ணயக்கா ஆகியோர் றிமாண்டில் வைக்கப்பட்டிருந்தனர்.

வழக்காளி நீதிமன்றம் வராததினால் வழக்கை தொடர்ந்து நடத்த முடியாதென சந்தேக நபர்கள் சார்பில் ஆஜரான சட்டத்தரணி திரு.சிற்றம்பலம் வாதிட்டார்.

நீதவான் சந்தேக நபர்களை விடுதலை செய்தார். (ஈ)



சாரண ஆசிரியர் அவத்தைப் பயிற்சி (4) (தருசின்னப் பயிற்சி) மீரிகம சாரண ஆசிரியர் பயிற்சிக் கல்லூரியில் அண்மையில் 10 நாட்கள் நடைபெற்றது. 2-ம் வருடங்களுக்குப் பின் தமிழ் மொழியில் முதல்முறையாக நடைபெற்ற இப்பயிற்சியில் யாழ். மாவட்டத்திலிருந்து 22 சாரணத்தலைவர்களும் மாத்தளையிலிருந்து ஒருவரும் பங்குபற்றினர் இப்பயிற்சி நெறியை கோ. செல்வநாயகமும் தேசிய பயிற்சி ஆணையாளர் தலைமைச் செயலகத்தைச் சேர்ந்து திரு. பி. எஸ். இராஜமணியும் நடாத்தினர்கள்.

## "தமிழினம் பெருமையுடன் வாழ மொழிமதப்பற்று அவசியம்"

### நூல்வெளியீட்டு விழாவில் உடுவில் எம். பி.

(யாழ்ப்பாணம்)

"அனுபூதிமான்கள் ஆன்ற சமய அறிவு படைத்த பெரியார்கள் செய்யவேண்டிய ஒரு கடவுட் கைங்கரியத்தைச் செய்யுமாறு நான்பணிக்கப்பட்டுள்ளேன். அதாவது பண்டிதர் ச. வே. பஞ்சாட்சரம் பாடிய இணுவை முருகன் பிள்ளைத் தமிழ் நூலினை வெளியிட்டு உரையாற்றும் உயர்ந்த பொறுப்பு, வெறும் அரசியல்வாதியான என்னிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளது இணுவை முருகன் திருவருட் செயலாகும். தமிழினம் தொடர்ந்தும் இந்தநாட்டில் பெருமையுடன் வாழ்வதற்கு வழிசெய்வன, தமிழினத்தின் தனித்துவக்கலைகளும் சமய சமூக இலக்கியங்களும் ஊட்டும் இன மொழி மதப்பற்றுக்களே என்பது மறுக்கமுடியாத உண்மை. எனவே இந்த இணுவை முருகன் பிள்ளைத் தமிழ் நூல்-உயர்ந்தசமயதத்துவங்களையும் அருட்கவர்ச்சியையும் உள்ளடக்கியதாகக்காணப்படும் இந்நூல் இலங்கைவாழ் தமிழ்மக்களால் நன்கு வரவேற்கப்படும் என்பதில் ஐயமில்லை"

மேற்கண்டவாறு அண்மையில் இணுவில் கந்தசுவாமி கோவில் மண்டபத்தில் நடைபெற்ற இணுவை முருகன் பிள்ளைத்தமிழ் நூல் வெளியீட்டு விழாவில், நூலினை வெளியிட்டுவைத்துஉரையாற்றிய மானிப்பாய்த் தொகுதி எம். பி. திரு. வி. தர்மலிங்கம் குறிப்பிட்டார்.

இவ்விழாவிற்கு ஆலய தர்மகர்த்தாச் சபையின் பொருளாளர் வித்துவான் வே. நல்லதம்பி தலைமைதாங்கினார். ஆலய தர்மகர்த்தா சபைத் தலைவர் திரு. அ. கணபதிப்பிள்ளையும், முன்னைநாள் தலைவர் இளைப்பாறிய நீதிபதி வி. எம். குமாரசுவாமியும் குத்துவிளக்கேற்றி விழாவைத் தொடக்கிவைத்தனர். திரு. செ. சோதிப்பெருமாள் வரவேற்புரை நிகழ்த்தினார்.

'இந்து சாதனம்' ஆசிரியர் சைவபூஷணம் நம. சிவப்பிரகாசம் ஆசியுரை நிகழ்த்தினார்.

திரு. க. சி. குலரத்தினம் பேசுகையில் "ஒரு தடவைக்கு இருதடவை சாகித்திய மண்டலப் பரிசில்பெறத் தகுதியானவராக எழிலிதண்டலைஎன்னும் நூல்கள் மூலம் அறிஞர்களால் தேர்ந்தெடுக்கப்பட்ட கவித்திறன் மிக்க கவிஞர் பஞ்சாட்சரத்தின் கவித்துவம் அருள் பெருக்கும் இப்பிள்ளைத் தமிழ் பாடப் பயன்பட்டது. சைவ உலகின் தவப்பயன்" எனக் குறிப்பிட்டார்.

சிவத்தமிழ்ச்செல்வி தங்கம்மா அப்பாக்குட்டி நூலாய்வுரை நிகழ்த்துகையில், 'ஆண்டவனோடு உறவாடி உள்ளுருகி விளையாடி வாதாடிச் செய்யும் வழிபாடே உண்மை யான பயன்தரவல்ல வழிபாடு!

அவ்வாறு இணுவை முருகனைக் குழந்தையாகக்கண்டு களிகூர்ந்து தாலாட்டிச் சீராட்டி விளையாடிக் கொண்டாடி உள்ளுருகியே கவிஞர் பஞ்சாட்சரம் இணுவை முருகன் பிள்ளைத்தமிழ்ப் பாடல்களைப் பாடித்தள்ளியுள்ளார் என்பது தெற்றெனத் தெரிகிறது. இந்நூல் ஒவ்வோர் சைவமக்கள் வீட்டுப் பூசை அறையிலும் இடம்பெறவேண்டிய சிறப்பு வாய்ந்தது. நாளொன்றுக்கு ஒருபாடல் வீதம் பொருளுணர்ந்து பாடிவந்தால் முருகன் திருவருள் சித்திக்கப்பெறலாம் என்று துணிந்து கூறுகிறேன்" என்று குறிப்பிட்டார்.

மேலும், எழுத்தாளர் புத்தொளி, பண்டிதர் நா. இராசையா, ஆசிரியர் ஆ. சுப்பிரமணியம் ஆகியோரும் நூலாய்வுரை நிகழ்த்தினர். நூல் மங்களப்பிரதி, பிரம்மஸ்ரீ கு. இராமநாதக்குருக்களும்,முதற்பிரதிகளை மில்க்வைற் தொழிலதிபர் திரு. க. கனகராசா, துரை சுப்பிரமணியசிவம், டாக்டர் க. பாலசுப்பிரமணியம் ஆகியோரும் பெற்றுக் கொண்டனர்.

நூலாசிரியர் பண்டிதர் ச.

(5-ம் பக்கம் பார்க்க)

## சித்தங்கேணியில் வெளியூர்வாசிகள் நால்வர் கைது

(பண்டத்தரிப்பு)

சித்தங்கேணிச் சந்திக்கு அருகாமையில் சந்தேகத்திற்கு இடமான முறையில் நின்ற நான்கு வெளியூர் வாசிகளை சங்கானைப் பொலிசார் கைது செய்து மல்லாகம் மாவட்ட நீதிமன்றத்தில் ஆஜர் செய்த போது அவர்களை இம்மாதம் 30-ம் திகதி வரை றிமாண்டில் வைக்குமாறு நீதிபதி உத்தரவிட்டார்.

சங்கானைப்பொலிஸ் பகுதியில் அடுத்தடுத்து நடைபெற்று வரும் வீடுடைத்துத் திருடும் சம்பவங்களை அடுத்து ரோந்து சுற்றுவதில் ஈடுபட்ட சங்கானைப்பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரி திரு. டி. பிரேமதாசா தலைமையில் சென்ற பொலிஸ் கோஷ்டி சித்தங்கேணிச் சந்திக்கருகில் சந்தேகத்திற்கிடமான முறையில் நின்ற கிளிநொச்சி முல்லைத்தீவு, மானிப்பாய் ஆகிய இடங்களைச் சேர்ந்தவர்களான தங்கராசா குணராசா, சிவஞானசுந்தரம் சுந்தரராசா முனிஐயா யோகராசா தங்கராசா விக்கினராசா ஆகிய நான்கு சந்தேக நபர்களையும் கைது செய்தனர். இவர்களை மல்லாகம் மாவட்ட நீதிமன்றத்தில் ஆஜர் செய்தபோது இம்மாதம் 30-ம் திகதிவரை றிமாண்டில் வைக்குமாறு நீதிபதி உத்தரவிட்டார். (அ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"அரசுக்கு அடிபணிந்தால்

# சலுகைகள் கிடைக்குமேதவிர உரிமைகள் எதுவும் கிடைக்காது"

## தொழிற்சங்கக் கூட்டத்தில் பண்டிதர்

(யாழ்ப்பாணம்)

ஆளும் கட்சியான இந்த அரசுக்கு அடிவருடியாக இருந்து அடிபணிந்து எடுபிடி வேலை செய்து மாலை மரியாதை செலுத்தி நல்லபிள்ளையாக நடந்துகொள்வதன் மூலம் தமிழ் ஊழியர்கள் எவ்வித உரிமையும் பெற்றுவிட முடியாது. ஆனால், நல்ல இடத்திற்கு மாற்றம், பதவி உயர்வு போன்ற சலுகைகளை மட்டுமே பெற முடியும்.

யாழ். பொதுசன நூலக மண்டபத்தில் நடந்த இலங்கை அஞ்சல் தொலைதொடர்பு உத்தியோகத்தர் சங்க 3-வது ஆண்டு விழாவில் பேசிய ஊர்காவற்றுறை எம். பி. பண்டிதர் க. பொ. இரத்தினம் மேற்கண்டவாறு கூறினார்.

திரு. இ. பாலசுப்பிரமணியம் தலைமையில் நடந்த இக் கூட்டத்தில் பண்டிதர் க. பொ. இரத்தினம் மேலும் கூறியதாவது:- தமிழ் இன ஊழியர்கள், திணைக்கள ஊழியர்கள், எல்லா தொழிற்சங்க ஊழியர் குறைகள் என்று 3 வகையாக உள்ளது. இதில் பெரும் குறையாக இருப்பது அரச நிறுவனங்களில் கடமையாற்றும் தமிழ்த் தொழிலாளர் சிங்கள ஊழியரைவிட்டு வேறுபடுத்தி அடக்கி ஒடுக்கி பலகட்டுப்பாட்டுடன்தொழில் புரியும் நிலை இன்றும் இருந்து வருகிறது.

### சிங்களம் மட்டும் சட்டம்

56ம் ஆண்டு சிங்களம் மட்டும் சட்டம் வந்தபின் சிங்களத்தொழிலாளருக்கும் தமிழ் தொழிலாளருக்குமிடையில் வேற்றுமை ஏற்பட்டது. சிங்கள தேர்ச்சியின்மை காரணமாகச் சம்பளஉயர்வு, பதவி உயர்வு எதுவும் தமிழ் ஊழியர்களுக்குக் கிடைக்காமல் அடிமை ஊழியர்களாக வாழ்ந்து வருகிறார்கள்.

"மனித உரிமைகளை மதிக்காத எந்த அரசின் கீழும் தமிழர் சிங்களவருடன்சமமாக மதிக்கப்பட மாட்டார்கள். அரசியலமைப்பில், எல்லாவித உரிமைகளும் கொடுத்து விட்டோம் என்று கூறுவது வெறும் ஏமாற்று.

### போராடிப் பெறவேண்டும்

"சிங்கள ஸ்ரீலங்கா அரசின் அடிமைகளாக இருந்து கொண்டு உரிமைகளை பெற முடியாது. சிங்கள ஏகாதிபத்திய அரசை இடித்துரைத்துப் போராடியே உரிமைகளைப் பெறவேண்டும்.

"எங்களுக்கென ஒரு அரசியலமைப்பை ஏற்படுத்தி, தொழிலாளர்களை நியமித்து அரசை நடத்தி வருவோமே யானால் சிங்கள ஏகாதிபத்திய அரசிடம் பிச்சை கேட்டு வாழத் தேவையில்லை. நாங்களே எங்களை ஆளுவோம்.

"உரிமைகளைப் பெறுவதற்கு மொழி வழித் தொழிற் சங்கங்கள் சேர்ந்து போராட வேண்டு. வெல்லுவோமா என்பது கேள்வியல்ல. தொழிலாளர் அணிதிரள வேண்டியது அவசியம்.

### 25 ஆயிரமும் 1500-ம்

இந்த அரசு ஆட்சிக்கு வந்த பின் 25,000 சிங்கள ஆசிரியர்கள் நியமிக்கப்பட்டுள்ளனர். இதே சமயம் 1500 தமிழ் ஆசிரியர்கள் மட்டுமே நியமிக்கப் பட்டனர்.

"71 சத வீதமான சிங்கள இனத்திற்கு 87 சதவீத ஆசிரியர்களும், 20 சத வீதமான தமிழினத்திற்கு 11 சத வீத ஆசிரியர் பதவிகளும், 7 சதவீத முஸ்லிம்களுக்கு 5 சத வீத ஆசிரியர்களும் நியகிக்கப் பட்டனர். இந்த வீதப்படி 20 வீத தமிழ் இனத்திற்கு 4000 தமிழ் ஆசிரியர்கள் நியமிக்கப் பட்டிருக்க வேண்டும். சனத் தொகைப்படி 6000 தமிழ் ஆசிரியர்கள் நியமனம் பெற்றிருக்க வேண்டும்.

"ஊழியர்கள் இல்லாத காரணத்தினால் பல திணைக்களங்கள் கஷ்டப்படவேண்டிய நிலை உள்ளது. புகையிரத பகுதி தபால் பகுதி ஊழியர்கள் அவர்கள் விரும்பினாலென்ன, விரும்பாவிட்டாலென்ன நாள் முழுவதும் வேலை செய்துகொண்டேயிருக்க வேண்டும். வீண் அரட்டை அடித்தே, வேறு விதத்திலோ நேரத்தைப் போக்க முடியாது. ஆதலால் இப்பகுதி கரைக்கு மேலதிக ஊழியர்கள் அவசியம்தேவை" அஞ்சல் அதிபர் திரு. பாலசிங்கம் பேசுகையில் கூறியதாவது:

இடவசதியின்மை, போதிய ஊழியர் இல்லாமை காரணத்தினால் அலுவலகம் முன்னேற முடியவில்லை.

வடமாகாணத்திற்கு நான் நியமிக்குமாறு கேட்ட மேலதிக ஊழியர்கள் இதுவரை நியமிக்கப்படவில்லை. 3 வருட காலத்திற்கு ஒருவர் மட்டுமே மேலதிகமாக நியமிக்கப்பட்டுள்ளனர். இந்த 3 வருட காலத்தில் வேலைகள் எவ்வளவோ அதிகரித்துள்ளன.

மேலதிக ஊழியர்களை வட பகுதிக்கு நியமிக்குமாறு நான் வடுத்த கோரிக்கை நிறைவேற்றப்படாததற்குக் காரணம் தெரியவில்லை.

"யாழ்ப்பாணத்திற்கு மட்டுமன்றி வேறு இடத்திற்கும் மேலதிகஊழியர்களை நியமிக்குமாறு கேட்டுள்ளோம்.

"வருடா வருடம் வேலை அதிகரித்து வருகிறதேயொழிய மேலதிக ஊழியர் நியமிக்கப் படவில்லை. இந்த 20-ம் நூற்றாண்டில்கூட சில அலுவலகங்களில் மல சல கூடங்கள் இல்லை. இந்தச் சீர்கெட்ட நிலைமை பற்றி நிர்வாகம் மட்டும் குரல் எழுப்பி பலனில்லை. தொழிற்சங்கங்களும் குரல் எழுப்பவேண்டும். (-சஅ)

---

## தமிழினம்...

(4-ம் பக்கத் தொடர்ச்சி)

வே. பஞ்சாட்சரம் தமது பதிலுரையில் "இப்பாடல்களைப் பாடத் தொடங்கியதிலிருந்து இந்த நிமிடம்வரை என்மனத்தில் இனந்தெரியாத ஆனந்தம் சாந்தி நிலவி வருவதை உணர்ந்து முருகனருளை வியந்து மெய் மறக்கிறேன்" எனக் கூறினார்.

இந்நூலை அச்சிட்டு வெளியீட்டுவிழா நடாத்திய இணுவில் கந்தசுவாமிகோவில்இளந் தொண்டர்சபை நிர்வாகிகள் சார்பில் திரு. இ. விக்கினேஸ்வரன் நன்றியுரை கூறினார். ((

---

# "இனமத பேதங்களுக்கு அப்பாற்பட்டது பரதக்கலை" — அமிர்

[அரியாலை]

"பரதக் கலையும், கர்நாடக இசையும் தமிழ் மக்களின் பாரம்பரிய கலைகளாகும். இவைகள் தமிழ் மக்களின் தனித்துவத்தை எடுத்துக்காட்டுவனவாக மிளிர்கின்றன. இக்கலைகள் மத, இன, பேத மற்றவையாக சகல வேற்றுமைகளையும் கடந்து பொதுக் கலையாகப் பிரகாசிக்கின்றன. பண்டைய தமிழ் நாட்டில் வாழ்ந்த சமணர்களும், வைஷ்ணவர்களும், பௌத்தர்களும் இக்கலைகளை ஒரேமாதிரியாகப் பேணிப் பாதுகாத்துவந்தனர். எமது பண்டைய கலைகளைப் பேணி வளர்க்கும் மனப்பான்மை தமிழ் மக்களிடையே இன்று பெருகிவருகிறது. பெற்றோர்கள் தமது பிள்ளைகளுக்கு இக்கலையைத் தகுந்த முறையில் பயிற்றுவிக்க முன்வந்தால் இக்கலையை எவராலும் அழிக்கவோ,சிதைக்கவோ முடியாது."

இவ்வாறு சதங்கை நர்த்தனாலயத்தின் 32 வது மணியான செல்வி ஜெயந்தி அன்ரனி இரத்தினத்தின் பரதநாட்டிய அரங்கேற்றத்தில் பிரதம விருந்தினராகக் கலந்துகொண்ட தமிழர் விடுதலைக் கூட்டணிச் செயலாளர் நாயகமும், எதிர்க் கட்சித் தலைவருமான திரு. அ. அமிர்தலிங்கம் பேசுகையில் குறிப்பிட்டார்.

அருட்திரு. அன்ரன் திலகரத்தினம் இராசநாயகம் அடிகளாரின் தலைமையில் நடைபெற்ற மேற்படி அரங்கேற்றத்தில் திரு. அ. அமிர்தலிங்கம் தொடர்ந்து பேசுகையில், சதங்கை நர்த்தனாலய அதிபர் நடனகலாஜோதி திருமதி லீலா ஆறுமுகையா பரதநாட்டியக்கலையை சிறந்த முறையில் கற்பித்து அனேக இளங்கலைஞர்களை இந்நாட்டிற்கு அளித்துவருகிறார். சதங்கை நர்த்தனாலயம் சிறந்த கலைக்கூடமாகமிளிர்வதுஎமக்கு மகிழ்ச்சிக்குரியதாகும். பரத நாட்டியத்திற்குப் பின்னணி

(8-ம் பக்கம் பார்க்க)

---

## பொலிகண்டி கி. அ. சங்கம்

(நெல்லியடி)

பொலிகண்டி கிராம அபிவிருத்திச் சங்கத்தின் வருடாந்த பொதுக் கூட்டம் இம் மாதம் 27ம் திகதி அ. மி. தமிழ்கலவன் பாடசாலையில் திரு. கா. சி. சுப்பிரமணியம் தலைமையில் நடைபெறவுள்ளது.

உடுப்பிட்டிப் பாராளுமன்ற உறுப்பினர் திரு. த. இராசலிங்கம், வல்வை நகர முதல்வர் திரு. ச. ஞானமூர்த்தி ஆகியோர் பிரதம விருந்தினராகக் கலந்து கொண்டு சிறப்புரை ஆற்றுவார்கள்.

---

"அறிவு வளர்ச்சியில்

# சிறுவர் பாடசாலைகளின் பங்கு மகத்தானது"

[யாழ்ப்பாணம்]

"நாட்டின் வளர்ச்சியின் பொறுப்புகளையும் அதிகாரங்களையும் கையேற்பவர்களாக வரவேண்டியவர்கள் சிறுவர்களே. சிறுவர்களை ஆரம்பத்திலே நல்ல முறையில் அறிவினை ஊட்டி வளர்க்கவேண்டும். இதற்கு சிறுவர் பாடசாலைகள் மிகவும் உன்னதமான முறையில் செயல்படவேண்டும்."

இலங்கை கிராமிய மீளமைப்பு நிறுவனம் நடத்தும் சிறுவர் பாடசாலையின் விளையாட்டுப் போட்டி, அரியாலை மேற்கு சிறுவர் பாடசாலைக்கு முன்னுள்ள திறந்த வெளியில் நடைபெற்றபோது பிரதம விருந்தினராகக் கலந்து கொண்ட மாநகரசபை அங்கத்தவர் திரு. ஆ. துரைராஜசிங்கம் பேசும்பொழுது மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

திரு. எஸ். பொன்னம்பலம் தலைமையில் நடைபெற்ற இவ் விளையாட்டுப் போட்டியில் வெற்றியீட்டிய சிறுவர்களுக்கு திருமதி பொன்னம்பலம் பரிசில்கள் வழங்கினார்.

மேற்படி நிலைய செயலாளர் திரு. செல்வரத்தினம் நன்றியுரையாற்றினர். (ஈ)

---

"1-ம் எதிரியிடமிருந்து

# முறையற்ற செல்வாக்கால் ஒப்புதல் வாக்குமூலம் பெறவில்லை"

## டியூட்டரிமாணவி கொலைவழக்கில் சப் இன்ஸ்பெக்டர் சாட்சியம்

(புலோலி நிருபர்)

"முதலாம்எதிரியிடம்வாக்கு மூலம் எடுக்கப்பட்டபோது நானோ உதவிப்பொலிஸ் அத்தியட்சகர் நிசாமோ 1ம் எதிரியிடம் முறையற்ற செல்வாக்கைப் பயன்படுத்தியோ, வலிந்தோ ஒப்புதல் வாக்கு மூலத்தைப்பெறவில்லை".

இவ்வாறு, பொலிகண்டி டியூட்டறி மாணவி கமலம் இராமச்சந்திரன்கொலைவழக்கு விசாரணையில் சாட்சியமளித்த சப்-இன்ஸ்பெக்டர் இரத்தின சபாபதியை 1ம் எதிரி சார்பில் ஆஜரான சட்டத்தரணி ஆர். ே. சபாரத்தினம் மீண்டும் பிறுக்கு விசாரணை செய்த குபாது சாட்சியாகிய சப்-இன்ஸ்பெக்டர் இரத்தினசபாபதி குறிப்பிட்டார். பருத்தித்துறை நீதிமன்றத்தில் நீதவான் திரு. கே. எஸ். மகேசன் முன்னிலையில் விசாரணை செய்யப்பட்டுவரும் இவ்வழக்கில் தொடர்ந்து குறுக்குவிசாரணை செய்யப்பட்டபோது இரத்தினசபாபதி கூறியதாவது: 10-4-80 அன்று சந்தேக நபர்களை நான் ஆனைவிழுந்தானுக்குக் கூட்டிச் சென்றேன். அன்று யார் பொலிஸ்நிலையப் பொறுப்பதிகாரி என்பதை பதிவுப்புத்தகத்தைப்பார்த்தே சொல்லமுடியும். சந்திரா குணரத்தினாதான் அன்று பொறுப்பதிகாரியாக இருந்தார் எனப் பதிவுப் புத்தகத்தைப் பார்க்காமல் சொல்ல முடியாது. 7-4-80ல் நான் 1ம் எதிரியைக் கொண்டுவருவதற்காக மன்றுக்கு விண்ணப்பம் செய்தபோது நானேபொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரியாக இருந்தேன். நான் மன்றுக்குச் செய்த இரண்டாவது விண்ணப்பம் நான் பொலிஸ் பொறுப்பதிகாரியாக இருந்த போதிலோ அல்லது சந்திரா குணரத்தினா பொறுப்பதிகாரியாக இருந்தபோதோ நடந்ததெனச் சொல்ல எனக்கு ஞாபகமில்லை.

3-4-80 யாழ் சிறைச்சாலை அத்தியட்சகர் காரியாலய அறைக்குள் வைத்து 1ம் எதிரியின் வாக்குமூலத்தை எடுத்தோம். இவ்வாக்குமூலத்தை காலை 10-35 மணிக்கு எடுக்க ஆரம்பித்தோம். ஒரு மணிக்கு சாப்பிட்ட பின்னர் 1-50 மணிக்கு மீண்டும் வாக்குமூலத்தைப் பதியத் தொடங்கி 2-50 மணிக்கு வாக்குமூலத்தைப் பதிந்துமுடித்தோம்.

நீதவான்: 1ம் எதிரியின் வாக்குமூலத்தைப்பதிவுசெய்து கொண்டிருந்தபோது இவர் ஏன் இப்படி தன்னை கொலைக்குற்றத்தை மாட்டும் விதத்தில் வாக்குமூலம்கொடுக்கிறாரென்று காரணங்களை யோசித்துப் பார்க்கவில்லையா? நாங்கள் சந்தேகம் கொள்ளவில்லை.

நீ.ந:- வழக்கமாக வாக்கு மூலம் எடுக்க கேள்வி போட்டு மறுமொழி கேட்டு அவர் சொல்லப் போகும் வாய் முறைப் பாட்டுத்தன்மையைத் தெரிந்து கொண்டும் அவ்வாய் முறைப்பாடு பதியப்படக்கூடியதா இல்லையா என்ற பின் தான் பதிவு செய்வீர்கள்? சொல்லுவதெல்லாவற்றையும் எழுதுவோம்.

3-4-80 காலை 7-30 மணிக்கு யாழ். சிறைச்சாலையில் 1ம் எதிரியைச் சந்தித்து காலை 10-35 மணி மட்டும் நானும் நிசாமும் 1ம் எதிரியுடன் கதைத்தோம். அந்த இடைவேளையில் நாங்கள் எதுவித குறிப்புகளும் எழுதவில்லை. ஏ. எஸ். பி. நிசாம் 1ம் எதிரியின் வாக்கு மூலத்தை எழுதும்படி விடுத்த பணிப்பின் பேரிலேயே நான் எழுதினேன். இவ்வாக்கு மூலம் குறிப்புப் புத்தகத்தில் 32 பக்கங்களைக் கொண்டுள்ளது. அது 5-4-80ல் புத்தகத்தில் ஒட்டப்பட்டன. அதில் 1ம் எதிரியின் ஒப்புதல் வாக்கு மூலக்கூற்று 18வது பக்கத்தில் வருகின்றது.

நானும் ஏ. எஸ். பி. நிசாமும் 1ம் எதிரியிடம் முறையற்ற செல்வாக்கைப் பயன்படுத்தியோ வலிந்தோ ஒப்புதல் வாக்கு மூலத்தைப் பெறவில்லை.

தொடர்ந்து சாட்சியமளித்த சப். இன்ஸ்பெக்டர் இரத்தின சபாதி கூறியதாவது, கமலத்திடமிருந்து எடுக்கப்பட்ட இரண்டு கடிதங்களை எழுதிய சசீதான் என்பவரை நாங்கள் விசாரித்தோம். இக்கடிதங்களை நான் வாசித்துப் பார்த்தேன். நுணுக்கமான நடவடிக்கைகளை மேற்கொள்வதற்காகவே நாம் இந்த நடவடிக்கைகளை மேற்கொண்டோம். சசீதானால் கமலத்திற்கு எழுதப்பட்ட கடிதத்தின் படி சசீதானுக்கு கமலத்தின் மீது கோபம் இருந்ததாகத் தெரியவில்லை.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சோவியத்யூனியனிடம் ஈராக் ஆயுத உதவி கோருகிறது

## அதிபர் ஹுசெய்னின் பிரதிநிதி ரஷ்யா சென்றுர்

பக்தாத், செப். 22

ஈரான் ஈராக் எல்லையில் நடைபெற்றுவரும் யுத்தம் நீடித்து வருவதை அடுத்து சோவியத்யூனியனிடம் ஈராக் ஆயுதஉதவி கோரியுள்ளது என்று அறிவிக்கப்பட்டுள்ளது.

சோவியத்யூனியனிடம் ஆயுத உதவி கோருவதற்காக ஈராக் ஜனதிபதி ஜனுப் சதாம் ஹுசெய்னின் நெருங்கிய ஆலோசகர் ஒருவர் மாஸ்கோ சென்றுள்ளார். இதேவேளையில் சோவியத் யூனியன் கப்பல் ஒன்று இராணுவ வாகனங்களை ஏற்றிக்கொண்டு நேற்று ஈராக்துறைமுகத்தை வந்தடைந்தது என்று அறிக்கப்பட்டது.

ஈராக்குக்கு சோவியத்யூனியன் ஆயுத உதவி வழங்கும் பட்சத்தில் ஈரான் — ஈராக் விவகாரம் உலகில் பெரும் நெருக்கடி ஒன்றைத் தோற்றுவிக்கும் என்று அவதானிகள் கருத்துத் தெரிவித்துள்ளனர். (இ)

## 8 ஈரானிய கப்பல்கள் மூழ்கடிப்பு; ஜெட்விமானம் சுட்டுவீழ்த்தப்பட்டது

பக்தாத், செப். 22

ஈராக்—ஈரான் எல்லையில் நடைபெறும் கடும் சமரில் எட்டு ஈரானிய கப்பல்கள் மூழ்கடிக்கப் பட்டுள்ளதாகவும் ஜெட் போர் விமானமொன்று சுட்டுவீழ்த்தப் பட்டுள்ளதாகவும் ஈராக் அறிவித்துள்ளது.

ஈரானிலுள்ள அபாதா விமான நிலையம் தாக்குதலுக்குள்ளானதையடுத்து கால வரையறையின்றி மூடப்பட்டுள்ளது.

இது இவ்வாறிருக்க, பிரிட்டிஷ் சரக்குக் கப்பலொன்று ஈரானிய போர் விமானங்களின் தாக்குதலுக்குள்ளயதாகவும் அறிவிக்கப்பட்டுள்ளது.

பிரிட்டிஷ் கப்பல் ஈராக் துறைமுகமொன்றை நோக்கிச் சென்றுகொண்டிருந்தபோதே தாக்குதலுக்குள்ளானதாகவும் அறிவிக்கப்பட்டது. (இ)

## இ. காங்கிரஸில் சேர்ந்தனர்!

சென்னை, செப். 22

தமிழ்நாடு காங்கிரஸ் கமிட்டியின் (காமராஜர் குழு) பொதுச்செயலாளர் திரு. பி. ஜம்புவும் மற்றும் இரு நிர்வாகக் கமிட்டி உறுப்பினர்களும் இந்திரா காங்கிரஸில் சேர்ந்துள்ளதாக அறிவித்தனர். (இ)

## முதல்வர்சென்ற ஹெலிகொப்டர் தாக்குதல்!

புவனேஸ்வர், செப். 22

ஒரிஸ்ஸா வெள்ளப் பெருக்கினுல் பாதிக்கப்பட்ட மக்கள் பலர், தங்களுக்குப் போதிய நிவாரணம் கிடைக்கவில்லை என்பதால் மாநில முதல்வர் திரு. பஸ்ஸாய் பயணம் செய்த ஹெலிகாப்டர் விமானத்தைக் கற்களால் தாக்கினர் என்று அறிவிக்கப்பட்டுள்ளது.

முதல்வரையும் அம்மக்கள் கூட்டம் கல் எறிந்து தாக்க முற்பட்டதாம். (இ)

## ஒரிஸ்ஸா வெள்ளநிவாரணம் இந்திரா ரூ. 5 லட்சம் உதவி

புதுடில்லி, செப். 22

ஒரிஸ்ஸா மாநில வெள்ளப் பெருக்கினுல் பாதிக்கப்பட்ட மக்களுக்கு நிவாரணம் அளிப்பதற்காக இந்தியப் பிரதமர் உதவிநிதியிலிருந்து 5 லட்சம் ரூபாவைப் பிரதமர் திருமதி இந்திராகாந்தி மாநிலகவர்னருக்கு அனுப்பியுள்ளார்.

அத்துடன் வெள்ள நிலை குறித்து திருமதி இந்திரா காந்தி மாநில முதல்வர் திரு. பஸ்ஸாயுடன் தொலைபேசியில் தொடர்பு கொண்டு அடிக்கடி விசாரித்து வருகிறுர். (இ)

## மீனவருக்கு மன்னுர், புதுக்குடியிருப்பில் 25 புதிய வீடுகள்

(மன்னுர்)

மன்னுர் உதவி அரசாங்க அதிபர் பிரிவிலுள்ள புதுக்குடியிருப்புக் கிராமத்தில் மீனவர் வீட்டுத்திட்டம் ஒன்றை ஆரம்பிக்க அனுமதி வழங்கப்பட்டுள்ளது. இத்திட்டத்தின் கீழ் சுமார் 25வீடுகள் நிர்மாணிக்கப்படும்.

# யாஸிர் அரபாத் சமரச முயற்சி

லண்டன், செப். 22

ஈராக்—ஈரான் நெருக்கடிக்கு சமரசத் தீர்வுகாணும் முயற்சியில் பாலஸ்தீன விடுதலை இயக்கத்தலைவர் ஜனுப் யாஸிர் அரபாத் ஈடுபட்டுவருகிறுர் என அறிவிக்கப்பட்டுள்ளது.

இச்சமரச முயற்சி தொடர்பாக ஜனுப் அரபாத், ஈராக் அதிபருக்குக் கடிதம் ஒன்றை எழுதியுள்ளார்.

ஜனுப் அரபாத்திடமிருந்து கடிதம் ஒன்று கிடைத்துள்ளதாக விபரம் அரசு அறிவித்துள்ளபோதிலும் அக்கடிதம் பற்றி ஈராக் எதையும் தெரிவிக்கவில்லை. (இ)

## 'உலகத்தமிழ்'சஞ் சிகை: மதுரை தமிழாராய்ச்சி மாநாடு வெளியிடும்

மதுரை, செப். 22

மதுரையில் நடைபெறும் 5வது உலகத் தமிழாராய்ச்சி மகாநாட்டை ஒட்டி 'உலகத் தமிழ்' என்ற பெயரில் சஞ்சிகை ஒன்று வெளியிடப்பட உள்ளது. இத்தகவலை தமிழக கிராமிய தொழில் துறை அமைச்சர் திரு. கே. ஏ. கிருஷ்ணசாமி தெரிவித்தார்.

5-வது உலகத்தமிழாராய்ச்சி மகாநாடு பொதுமக்கள்உறவுக் கமிட்டியே இரண்டு வாரங்களுக்கொருதடவை இச்சஞ்சிகையை விரைவில் வெளியிடுமென்றும், இக் கமிட்டியின் தலைவராகவும் தெரிவுசெய்யப்பட்டுள்ள திரு. கிருஷ்ணசாமி தெரிவித்தார்.

அடுத்தாண்டு ஜனவரியில் மதுரையில் நடைபெறும் தமிழாராய்ச்சி மகாநாடு தொடர்பான செய்திகளை உலக நாடுகளிலும் தமிழகம் தவிர்ந்த ஏனைய மாநிலங்களிலும் வாழும் தமிழ்மக்கள் அறிந்துகொள்ள இச்சஞ்சிகை பெரிதும் உதவுமென்றும் திரு. கிருஷ்ணசாமி தெரிவித்தார். (இ)

# ஈரானில் மீண்டும் முடிஆட்சி

கெய்ரோ, செப். 22

ஈரானிய ஷாவின் புதல்வர் முடிக்குரிய இளவரசர் அடுத்த மாதம் கெய்ரோவில் முடி சூடுவார்.

முடிக்குரிய இளவரசர் முடிசூடியதும் அதுபற்றி ஈரானிய மக்களுக்கு அறிவிப்பதோடு ஈரானுக்கு வெளியே - எகிப்தில் புதிய ஈரான் முடியரசு ஒன்று அமைக்கப்படும்.

ஈரானில் மீண்டும் முடி ஆட்சியைக் கொண்டுவர இந்த அரசு பாடுபடும்.

கெய்ரோவில் அமைக்கப்படும் இந்த அரசில் ஈரானிய ஷாவின் முன்னுள் அரசியல் பிரமுகர்களும் இராணுவ அதிகாரிகளும் அங்கம் வகிப்பர்.

எகிப்து அதிபர் அன்வர் சதாத்தின் முக்கிய ஆதரவாளர் ஒருவரினுல் வெளியிடப்படும் 'அக்டோபர்' என்ற சஞ்சிகையிலேயே இத்தகவல்கள் வெளியிடப்பட்டுள்ளன. (இ)

## வேலையிழந்த பயிலுநர்களுக்கு வேறு வேலை

### சபை ஆராய்கிறது

(மாவிட்டபுரம்)

பயிலுநர்களாக வேலைக்குச் சேர்த்துக் கொள்ளப்பட்டு தற்போது வேலையின்றித் தவிப்பவர்களுக்கு வேறு வேலைவாய்ப்புக்களைத் தேடிக் கொடுப்பது பற்றி அராய தேசிய பயிலுநர் நர் சபையின் அதிகாரிகள் வடபகுதிக்கு வந்துள்ளனர்.

இச் சபையின் சார்பில் வடபகுதியிலுள்ள பல்வேறு தொழிற்சாலைகளில் ஏராளமான ஆண்களும் பெண்களும் பயிலுநர்களாகச் சேர்க்கப்பட்டிருந்தனர். ஆனுல் சில தொழிற்சாலைகள் மூடப்பட்டதாலும், சிலவற்றில் வேலை இல்லாது போனதாலும் பயிலுநர்கள் வேலை இழந்துள்ளனர். அச்சுவேலியில் இயங்கிய தீப்பெட்டித் தொழிற்சாலை மூடப்பட்டதால் 200க்கு மேற்பட்ட யுவதிகள் வேலை இழந்துள்ளனர். இதுபோல் மல்லாகம் அபிவிருத்திச் சபை தொழில் நிலையத்திலும் பலர் வேலையிழந்துள்ளனர். (அ)

## "நாதஸ்வர தவில் கலைஞர்களை அரசு காப்பாற்ற வேண்டும்"

(மாவிட்டபுரம்)

"அரசினரின் உதவிகளோ ஏனைய ஒத்தாசைகளோ இன்றி ரசிகர்களை மட்டும் நம்பி வாழும் யாழ்ப்பாணத்து நாதஸ்வர, தவில் கலைஞர்களது பொருளாதார நிலைக்கு இடையூறுக இருக்கும் நிலைமையையிட்டு அரசாங்கம் கவனமெடுத்து நாதஸ்வர, தவில் கலைஞர்களைக்காப்பாற்ற வேண்டும்."

இவ்வாறு அரசாங்கத்தைக் கோரும் தீர்மானம் இலங்கை இசை வேளாளர் சங்கப் பொதுக்கூட்டத்தில் நிறைவேற்றப்பட்டுள்ளது.

மாவிட்டபுரத்தில்நாதஸ்வர வித்துவான் திரு. பி. எஸ். ஆறுமுகம்பிள்ளை தலைமையில் நடந்த இக் கூட்டத்தில் நிறைவேறிய மற்றும் தீர்மானங்களில் சில வருமாறு:-

"இலங்கை இந்திய கலைஞர்களது பரஸ்பர கலைத்தொடர்பு இன்றைய அரசாங்க காலத்தில் வலுப்பெற்றுள்ளதைப் பாராட்டுகிறேம். இத்தொடர்பு மேலும் வளர்ந்து இங்குள்ள கலைஞர்கள் அங்கு செல்லவும். அங்கிருந்து கலைஞர்கள் இங்கு வரவும் வேண்டும். ஆனுல் இந்தியக் கலைஞர்கள் இங்கு வந்து மாதக்கணக்காக நிற்பது இங்குள்ள கலைஞர்களுக்கு பாதிப்பை ஏற்படுத்துகிறது. ஆகவே இவர்கள் இங்குவந்து சிலதினங்கள் மட்டும் தங்கவே அரசாங்கம் அனுமதிக்கவேண்டும். சங்கத்தின் சம்மதம் பெற்றே இந்தியக்கலைஞர்களது வருகையை உறுதிப்படுத்த வேண்டும்.

"இசைவேளாளர் சமூக ஒற்றுமை கருதி இச் சமூகத்தவர்களிடையே உள்ள சங்கங்களை ஒன்றிணைக்க வேண்டும்.

நல்லூரில் இளங்கலைஞர் மன்றம் ஆரம்பிக்கும் இசைக் கல்லூரியில் மன்றத்துடன் இணைந்து நாதஸ்வர - தவில் பாடசாலை ஒன்றை நடத்த வேண்டும். (அ)

## துருக்கியில் புதிய அமைச்சரவை

ஏதன்ஸ், செப். 22

துருக்கியில் பிரதமர் அட்மிரல் கால உல்ஸ் தலைமையில் 26 அங்கத்தவர்களை கொண்ட அமைச்சரவை ஒன்று அமைக்கப்பட்டுள்ளது.

ஆயுதப்படைகளுடன் தொடர்பில்லாதவர்களேஇந்த அமைச்சரவையில் அங்கம் வகிக்கின்றனர்.

அண்மையில் புரட்சிச் சதி மூலம் ஆட்சியைக் கைப்பற்றிய இராணுவத்தினரின் மேற்பார்வையிலேயே புதிய அரசு இயங்கும் என்று அறிவிக்கப்பட்டுள்ளது. (இ)

## திருக்கழுங் குன்றத்தில் "கழுகு வரும் அதிசயம் ஆராயப்படவேண்டும்"

### தமிழக அமைச்சர் விருப்பம்

சென்னை, செப். 22

300 ஆண்டுகளாக திருக்கழுங்குன்றத்தில் பூஜை நேரத்தில் கழுகு வந்துசெல்லும் அதிசயம் பற்றிஆராய வேண்டும்.

இவ்வாறு தமிழக அறநிலையத்துறை அமைச்சர் திரு. ஆர். எம். வீரப்பன் தெரிவித்தார்.

மதுரை மீனுட்சி சுந்தரேஸ்வரர் திருக்கோயில்களின் அறங்காவல் குழுவின் தலைவர் திரு. வி. வி. சிதம்பரம் எழுதிய 'புண்ணிய பூமியில் புனித யாத்திரை' என்ற நூல் வெளியீட்டு விழாவில் உரை நிகழ்த்துகையிலேயே அமைச்சர் மேற்கண்டவாறு கூறினர். [illegible] கள் பற்றி பயனுள்ளபுத்தகங்களை எழுத இளைஞர்கள் முன்வரவேண்டுமென்றும் அமைச்சர் திரு. வீரப்பன் தெரிவித்தார்.

இவ்விழாவில் தமிழக சட்டமேலவைத் தலைவர் டாக்டர் ம.பொ. சிவஞானம், கி. வா. ஜெகந்நாதன், தமிழக ஆஸ்தானக்கவிஞர் கண்ணதாசன், ஆகியோரும் கலந்துகொண்டு உரையாற்றினர். (இ)

## சாட்டி உற்சவம்

(யாழ்ப்பாணம்)

வேலணைசாட்டிசிந்தாத்திரை மாதா ஆலய உற்சவம் கடந்த வெள்ளிச்கிழமை கொடியேற்றத்துடன் ஆரம்பமானது.

இம்மாதம் 28ம்திகதிஞாயிற்றுக்கிழமை நடைபெறும் திருச்சொருபபவனி திருப்பலி பூசையுடன் உற்சவம் பூர்த்திபெறும். இ. போ. ச. விசேஷ பஸ் சேவை உற்சவத்தையொட்டி நடைபெறும். 21ம் திகதி அன்னதானம் நடைபெறும். (அ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வெஸ்லி
(மானிப்பாய்)
தினசரி 6-30, 9-30
சனி ஞாயிறு 2-30
கைகொடுத்த தெய்வம்

நாகம்ஸ் (சுன்னுகம்)
தினசரி 6-30, 930
சனி, ஞாயிறு 2-15
எம் ஜி ஆர் - சரோஜாதேவி
பணக்காரக் குடும்பம்
(புதிய பிரதி)

ஹரன் (யாழ்ப்பாணம்)
தினசரி 4 காட்சிகள்
எம். ஜி. ஆர்.
ஜெயலலிதா
நடித்த
ராமன்தேடியசீதை

வெலிங்டன்
(யாழ்நகர்)
தினசரி 4 காட்சிகள்
THE DEEP

லிடோ
(யாழ்நகர்)
தினசரி 10-30, 2-15, 4-45
7-15, 9-45
Foul Play

மனோகரா (யாழ்ப்பாணம்)
தினசரி 10-30, 4-45, 7-00, & 9-45
SEAN CONNERY, RICHARD BURTON in
SHALAKO
எதிர்பாருங்கள்
ஒரேவானம் ஒரேபூமி

WINDSOR (JAFFNA)
IT'S EVIL ..... IT'S HORRIFIC
IT'S CONCEIVED BY THE DEVIL
Daily 4 Shows
Daily at 10-30 a. m, 2-00, 4-30, & 7-00 p. m only
JOAN COLLINS — EILEEN ATKINS
RALPH BATES — DONALD PLESANCE
in
"I DONT WANT TO BE BORN"
Color - Adults only

சாந்தி (யாழ்நகர்) போன்: 7642
10-30, 2-30, 6-30, 9-45
75—வது வெற்றித் திருநாளை நோக்கி ..
நீயா?
கமல், லதா, ஸ்ரீபிரியா, மஞ்சுளா, விஜயகுமார், நம்பியார், சுருளி
இசை: சங்கர் — கணேஷ்
எதிர்பாருங்கள்: திசைமாறிய பறவைகள் கலர்

# வல்லிபுர ஆழ்வார்

(3-ம் பக்கத் தொடர்ச்சி)

"வல்லி! உனது தூயபக்தி என்னை இவ்விடம் ஈர்த்து வந்துவிட்டது. நாளைக் காலை சுற்கோவளம் கடற்கரைக்கு வருக" எனக் கூறி மாயவன் மறைந்துவிட்டான்.

மனம் மிக மகிழ்ந்த வல்லி மறுநாட் காலை கடற்கரைக்குச் சென்ருள். கடற்கரையில் அமர்ந்து, மனத்தை ஒருமுகப்படுத்தி மாதவனின் திருவடியை நினைந்து தியானித்தாள். உள்ளம் உருகி, உணர்ச்சி பொங்க அருட்பாக்களைப் பாடினுள்.

பாவை பக்திபரவசத்தில் பாடிக்கொண்டிருந்தாள். மீனின் அட்டகாசம் அதிகரித்துக்கொண்டிருந்தது. அலைகள் ஆர்ப்பரித்தெழுந்தன. கடற்கரையில் குழுமியிருந்த மக்கள் கூட்டம், மனதில் கவலை பொங்க ஏங்கித் தவித்துக்கொண்டிருந்தது. இவ்வேளையில் எல்லோரும் அதிசயிக்கும் வண்ணம் அற்புதம் ஒன்று நிகழ்ந்தது. மீன் உருக்கொண்டு கடலைக் கலக்கிய மாயவன், பக்திபரவசத்தில் ஆழ்ந்திருந்த பக்தை வல்லியின் மடியில் அழகிய குழந்தை வடிவில் வீழ்ந்து தவழ்ந்தான். பாவையின் மடியில் பாலகோபாலன் திகழ்வதைக் கண்ட பக்தர்கள் பரவசம் அடைந்தனர். வல்லியோ அளவிலடங்கா ஆனந்த வெள்ளத்தில் மூழ்கினுள்.

குழந்தைக் கண்ணனைப் பார்த்துப் பார்த்துப் புளகாங்கிதம் அடைந்த வேளையிலே எல்லாரும் அதிசயிக்கும்வண்ணம் மீண்டும் ஓர் அற்புதம் நிகழ்ந்தது. குழந்தை மாயவன் மறைந்தான். அவன் இருந்த இடத்தில் சக்கரம் ஒன்று திகழ்ந்துகொண்டிருந்தது. சக்கரதாரியாகிய விஷ்ணுவைப் போற்றிய பெருமக்கள் அச்சக்கரத்தைப் பிரபலமான கோயிலொன்றுக்கு எடுத்துச்செல்லும் எண்ணத்துடன் பல்லக்கில் வைத்து பஜனைபாடிக்கொண்டு காவிச் சென்றனர். நெடுந்தூரம் பல்லக்கைக் காவிச்சென்ற களைப்பு மேலீட்டினுல் பல்லக்கை இறக்கி வைத்துவிட்டு நீர் அருந்தச் சென்றனர். திரும்பி வந்து பார்த்தபோது சக்கரம் நிலத்திற் பதிந்திருந்தது. அதைப் பெயர்த்தெடுக்கமுடியவில்லை. இது திருவருளின் செயல் எனக்கருதி அந்த இடத்திலேயே கொட்டில் ஒன்றை அமைத்து பக்தர்கள் பூசித்து வந்தனர். இன்றும் வல்லிபுர ஆழ்வார் மூலஸ்தானத்தில் திகழ்ந்து கொண்டிருப்பது சக்கரமே.

தட்சணகைலாச மான்மீயத்தில் வல்லிபுர வைபவ அத்தியாயத்தில் கூறப்பட்டுள்ள கதையும் ஏறத்தாழ இதைப்போன்றதே.

யாழ்ப்பாணராச்சியத்தின் இராசதானியாகிய சிங்கை நகர் வல்லிபுரப்பகுதியே என்ற கருத்தை அறிஞர் பலர் வெளியிட்டுள்ளனர். முதலியார் இராசநாயகம், சுவாமி ஞானப்பிரகாசர் பேராசிரியர் கணபதிப்பிள்ளை முதலியோர் அவர்களுட்சிலர்.

ஆழ்வார் என்னும் பெயர் பொதுவாக திருமால் அடியார்க்கே வழங்குவது. அப்பெயர் திருமாலைக்குறிக்க வழங்குவதற்குச் சான்று சோழப்பெருமன்னர் காலத்து தமிழ்ச்சாசனம் ஒன்றிலே "ஆழ்வார் திருவரங்கதேவர்" என்று வருகிறது. ஆழ்வான் என்ற சொல்லுக்குச் சூரியன் என்ற பொருள் உண்டு. வேதகாலத்தில் சூரியனேடு தொடர்புடைய தெய்வமாகவே விஷ்ணு கூறப்படுகிருர். சூரிய குலத்து மன்னர்களாலே பூசிக்கப்பட்டு வந்தமையினுல் அரங்கநாதர் ஆழ்வார் எனப்பட்டமைக்கான காரணம் ஆராயப்படவேண்டும்" என கலாநிதி ஆ. வேலுப்பிள்ளை அவர்கள் தனது ஆராய்ச்சி கட்டுரை ஒன்றில் கருத்துத் தெரிவித்துள்ளார்.

இத்தகைய வரலாற்றுச் சிறப்பு மிக்க வல்லிபுர ஆழ்வார் கோவிலை வழிபடுவோர் மனமாசு நீங்கி தூய்மை பெற்று பேரின்பத்தில் திளைப்பர்.

ராஜா - யாழ்ப்பாணம்

தினசரி 4 காட்சிகள்

கலைஞர் மு. கருணுநிதியின் கைவண்ணத்தில் உருவான வசனம்.

மக்கள் கலைஞர் ஜெய்சங்கரின் அருமையான சண்டைக் காட்சி.

அருமையான பாடல்களுடன் குழுகுழு கலரில் உருவான ஒப்பற்ற திரைக் காவியம்.



ஜெய்சங்கர், ஜெயசித்திரா, அசோகன், எம். ஆர். ராதா, எஸ், வி. சுப்பையா நடிக்கும்

வண்டிக்காரன் மகன்

(ஈஸ்மன் கலர்)

**போயா தினத்தையொட்டி இன்று சினிமா காட்சிகள் இல்லை**

# தமிழ்க்...

(3-ம் பக்கத் தொடர்ச்சி)

வாகவும் வாக்களித்தனர். அதன்பின் கூட்டம் முடிவுற்றது. பெரியவர் ஜி. ஜி. பொன்னம்பலத்தின் பாசறையில் வளர்ந்த உண்மைக் காங்கிரஸ் கட்சித் தொண்டர்களுக்கு இன்று கட்சிக்குள் இடமில்லை. அகில இந்தியாவின் சுதந்திரத்திற்காக ஸ்தாபிக்கப்பட்ட காங்கிரசை ஜவஹர்லால் நேரு எப்படிக் கட்டி வளர்த்தாரோ, அவர் இறந்த பின் பதவி ஆசை பிடித்தவர்களும், சுயநலவாதிகளும் ஆகிய சரண்சிங், இராஜ்நாராயண், பகுகுணு போன்றவர்கள் கட்சியைச் சின்னுபின்னமாக்கிருர்கள். அதே போன்று அமரர் ஜி. ஜி. பொன்னம்பலம் அவர்கள் இலங்கை வாழ் தமிழ் பேசும் மக்களுக்கும் முஸ்லிம் மக்களுக்குமாக ஸ்தாபித்த தமிழ்க்காங்கிரசை அவர் இறந்தபின் எமது கட்சிக்குள்ளும் சரண்சிங், ராஜ் நாராயண், பகுகுணு போன்ருேர்கள் கட்சியைச் சின்னுபின்னமாக்கப் பார்க்கிருர்கள்.

ஆகவே நிர்வாகசபையின் உண்மை உறுப்பினர்கள் ஆகிய டாக்டர் ஏ. எல். ஏபிரகாம், சட்டத்தரணி இளையதம்பி, சட்டத்தரணி சிவபாதசுந்தரம், காங்கிரஸ் பொருளாளர் அப்துல்காதர் யூசுப், முன்னைநாள் தமிழ்க்காங்கிரஸ் தலைவர் சட்டத்தரணி எம். எஸ். சுந்தரலிங்கம், முன்னைநாள் உதவி அரசாங்க அதிபர் மூர்த்தி, கொழும்புக் கிளையைச் சேர்ந்த மோதிலால் நேரு, திரு. விநாயகமூர்த்தி, ஆர். ரி. சுப்பிரமணியம், இன்னும் பல முக்கிய உறுப்பினர்கள் கலந்துகொள்ளவில்லை. மேலும் பத்திரிகை வாயிலாக பொதுச் சபைக் கூட்டமெனச் செயலாளரால் அறிவிக்கப்பட்டிருந்தது, ஆனுல் நடைபெற்றது நிர்வாகசபைக் கூட்டம். இப்படியான பெரும் முடிவை எடுப்பது பொதுச்சபையே ஒழிய நிர்வாகசபை அல்ல.

**சின்னையா சுப்பிரமணியம்,**
தமிழ்க் காங்கிரஸ்
வாலிப முன்னணி.
கொக்குவில்.

# இன்றைய பலன்

புரட்டாதி மாதம் 7-ம் திகதி
(செவ்வாய்க்கிழமை)
(23 - 9 - 1980)

மேடம்: ஆசை அலைகளால் அவப்பெயருக்கு இடமுண்டு. குறுக்கு வழிகளில் இறங்க வேண்டாம் வீட்டில் சிறு பிணி தலைதூக்கும். சிறிய விடயத்துக்குக்கூட பெரிய கோபம் தோன்றக்கூடும்.

இடபம்: அறிஞர்கள் சந்திப்பு இன்று நிகழும். அறவழியில் ஆர்வம் பிறக்கும் ஆசைப்பணியில் கவனம் செலுத்தவும் இலட்சிய வாதிகளுக்கு இன்று பொன்னுன தினம்.

மிதுனம்: இதயங்கள் இணைவதற்கு இன்று நல்ல நாள். அபிப்பிராய பேதங்கள் மறையும் பிரிந்தவர்கள் மீண்டும் வாழ்க்கையில் இணைவர் பந்துக்கள் ஆதரவு பெருகும். குடும்பத்தில் ஆதரவு பெருகும்.

கடகம்: தூரதேச வாசம் உங்களைத்துயரத்தில் ஆழ்த்தும் எதிர்பாராத விபத்துக்கு இடமேற்படலாம். ஆயுதங்களுடன் பழகுபவர்கட்கு நல்ல நாள்.

சிங்கம்: கனிவான சம்பவங்கள் நடைபெறும் காதலர்களுக்கு கனிவானதினம். சிலருக்கு திடீர் திருமணமும் நடைபெறும்.

கன்னி: [illegible] டனமுடையயினுல் பெரிதும் வேதனைப்படுவீர்கள் கடன் தொல்லைகளும் அதிகரிக்கும். நம்பியிருந்த இடத்திலிருந்து ஏமாற்றமான செய்தி கிடைக்கலாம் மனத்தளர்ச்சிக்கு இடங்கொடாது நடந்து கொள்ளவும்.

துலாம்: தேடிய இன்பம் காலடியில் கிடைக்கும் மூத்தோர்கள் உதவிக்கும் இடமேற்படும் சிலருக்கு தெய்வ வழிபாட்டில் அதிக ஆர்வம் பிறக்கும். ஸ்தலயாத்திரைக்கும் இடமுண்டு.

விருட்சம்: வெற்றிப்பாதையில் வீறுநடை பேடுவீர்கள் தொழில துறையில் புதிய உற்சாகம் பிறக்கும். எதிரிகள் மத்தியில் ஏற்டும் மனமாற்றம் உங்கள்செல்வாக்கை வளர்க்கும் சுபதினம்.

தனு: இரக்க சிந்தை மேலிடும் பொதுப்பணிகளில் ஆர்வம் காட்டுவீர்கள். பெரிய இடத்துத் தொடர்புகள் ஏற்படுவதற்கும் இடமுண்டு.

மகரம்: ஏமாற்றங்கள் நிறைந்து காணப்படுகின்றன சிறிய தவறுகள் பெரிய நெருக்கடியை உருவாக்கலாம் தொழில்துறையில் மறைமுக எதிர்ப்புக்கள் தோன்றும் எதிலும் முன் எச்சரிக்கையுடன் இருக்கவும்.

கும்பம்: குடும்பத்தில் சிறு பூசல்கள் தலைதூக்கி மறையும் மனதில் அமைதி குன்றும் விஷமிகள் புனைந்துரைகளால் ஆத்திரம் அதிகரிக்கும்.

மீனம்: சமயோசிதமான நடவடிக்கைகள் மூலம் எதையும் சமாளித்துக் கொள்வீர்கள் இல்லறத்தில் அமைதி நிலவும். பூமியால் இலாபமுண்டு பேச்சு வார்த்தைகள் இன்று நல்ல பலனை அளிக்கும்.

சோதிடக்கலாநிதி
**க. வேலுப்பிள்ளை**

# இன்று தேர்த்திருவிழா

(உரும்பராய்)

உரும்பராய் கருணுகரப் பிள்ளையார் கோவில் தேர்த் திருவிழா இன்று செவ்வாய் பிற்பகல் நடைபெறுகிறது. நாளை பிற்பகல் தீர்த்தத் திருவிழா நடைபெறும். )அ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

டில்கா
ரேடியோ அன் டீ.வி டெக்னீஷியன்ஸ் பஸ்நிலயம் எதிர்மேல்மாடி



உங்கள்
ரேடியோக்கள்
டேப்றெக்கோடர்கள்
மின்சார உபகரணங்கள்
தொலைக்காட்சிப் பெட்டிகள்
எதுவாகுலும்
உடன் சிரமைத்துக் கொள்ள,
202, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம்.

ஈழநாடு 50 சதம்
The EELANAADU

## பிரிட்டனின் நவீன ஏவுகணை

லண்டன் செப். 22.

எதிரிகளின் 'றடர்' கண்காணிப்புக்குள் சிக்காது தாக்குதல் நடத்தக் கூடிய நவீன ஏவுகணை ஒன்றை பிரிட்டன் உற்பத்தி செய்து வருகிறது என அறிவிக்கப்பட்டுள்ளது.

100 கோடி ரூபா செலவில் இது அமைக்கப்பட்டு வருகிறது.

சோவியத் பாதுகாப்பு அமைப்பு முறையை மீறக் கூடிய பல முனை அணுசக்தி ஏவுகணையே இதுவாகும். (இ)

30-9-80 வரை விசேஷசலுகை
5% கழிவுடன்
பெற்றுக்கொள்ளலாம்
HONDA N. C. 50
PALADIN
பெண்கள் இலகுவாக
ஓடக்கூடியது
பல்க்கன் ஏஜென்சி
ஐந்து சந்தி
யாழ்ப்பாணம்.

# அபிவிருத்தி சபைத் தேர்தலில் நாம் ஏன் போட்டியிடுகின்றோம்?

## 'குமார்' தரும் விளக்கம்

(யாழ்ப்பாணம்)

"சுதந்திரம்தான் எமது ஓரே லட்சியம். என்றும் அதிலிருந்து கீழிறங்கி எதனையும் ஏற்க முடியாதெனவும், யு. என். பி. ஆட்சியாளரின் அபிவிருத்தி சபைகளை ஏற்க மறுப்பதாகத் தமிழினம் சிங்கள இனத்திற்கும், உலகத்திற்கும் அறிவிக்கக்கூடிய ஒரு வாய்ப்பு தமிழ்க் காங்கிரசுக்கு வாக்களிப்பதன் மூலம் யு. என். பி. கூட்டணி வேட்பாளர்களைத் தோற்கடிப்பதேயாகும். எனவே தமிழ்க் காங்கிரஸ் தமிழ் மக்களுக்கு அச் சந்தர்ப்பத்தை அளிப்பதற்காகவாவது தேர்தலில் போட்டியிட வேண்டும் என்றும் முதியவர்கள் சிலர் வற்புறுத்தியதன் பேரில் அபிவிருத்திச் சபைகளுக்கான தேர்தலில் போட்டியிடுவது என்று செயற்குழு பெரும்பான்மை வாக்குகளால் தீர்மானித்தது"

மேற்கண்டவாறு அகில இலங்கைத் தமிழ்க்காங்கிரஸ் பொதுச்செயலாளர் திரு. ஜீ. ஜீ. பொன்னம்பலம் விடுத்துள்ள அறிக்கையில் தெரிவித்துள்ளார். அவ்வறிக்கையில் மேலும் கூறியதாவது:-

"அகில இலங்கை தமிழ்க் காங்கிரஸ் செயற்குழு 20-9-80 சனிக்கிழமை காலை மணியளவில் உபதலைவர் திரு. எஸ். ஆர். கனகநாயகம் அவர்கள் தலைமையில் கூடியபொழுது அபிவிருத்தி சபைகளுக்கான தேர்தலில் பங்கு பற்றுவதா? இல்லையா? என்பது பற்றி ஆராயப்பட்டது.

அபிவிருத்தி என்ற போர்வையில் அரசியல் தீர்வாகக் கொண்டுவரப்பட்டுள்ள அபிவிருத்திச் சபைகளுக்கு நடைபெறவிருக்கும் தேர்தலில் அ. இ. தமிழ்க்காங்கிரஸ் கலந்து கொள்ளாமல் பகிஷ்கரிப்பதன் மூலம் தமிழினத்தின் எதிர்ப்பினைக் காட்ட வேண்டும் என்றும் யு. என். பி. அரசாங்கத்தின் அரசியல் தந்திரத்திற்குப் பலியாகாது தமிழினம் தனது சுதந்திர உணர்வினைத் தேர்தலைப் பகிஷ்கரிப்பதன் மூலம் காட்ட முடியும் என்றும் இளைஞர்கள் சிலர் வற்புறுத்தினர்.

தமிழினம் ஒன்றுபட்டு ஏகமனதாக அபிவிருத்தி சபைகளுக்கான தேர்தலைப் பகிஷ்கரிக்கும் பட்சத்தில் தமிழ்க் காங்கிரசும் பகிஷ்கரிக்கலாம் என்றும் தமிழினம் முழுமையாகப் பகிஷ்கரிப்பில் ஈடுபடாத பட்சத்தில் சுயநலவாதிகளும், சந்தர்ப்பவாதிகளும், இனத்துரோகிகளுமான கூட்டணியினரும் தமிழினத்தின் பரம எதிரிகளுமான யு. என். பி. யினரும் தெரிவு செய்யப்பட்ட பிரதிநிதிகளாக இடம் பெற்று விடுவர் என்றும்.

தமிழினத்தின் ஒரு பகுதியினர் வாக்களிப்பினைப் பகிஷ்கரிக்கும் பட்சத்தில் 1977-ம் ஆண்டுப்பொதுத்தேர்தலிலும் 1979-ம் ஆண்டு உள்ளூராட்சி மன்றத்தேர்தலிலும் போட்டியிருந்தும் கூட கையாளப்பட்ட ஆள்மாறாட்டத்தைப் பன்மடங்கு அதிகமாக எதிரணியினர் செய்யக்கூடும் என்றும் வாக்களிப்பினைப் பகிஷ்கரிப்பவர்களுடைய வாக்குகளையும் எதிரணியினர் போடக்கூடும் என்றும் இவ்வாறு செய்வதன் மூலம் தமிழ் மக்களும் தம்மை ஆதரிக்கின்றனர் என்றும் பகிஷ்கரிப்பு தோல்வி அடைந்துவிட்டது என்றும், யு. என். பி.யும், கூட்டணியும் கூட்டாகப் பிரசாரம் செய்யக் கூடும் எனவும், தேர்தலில், போட்டியிடுவதன் மூலம்தான் வாக்களிப்பு நிலையங்களில் பிரதிநிதிகளை நியமிக்க முடியும் அவ்வாறு செய்வதன் மூலம்தான் ஆள்மாறாட்டத்தை ஓரளவாவது தடுக்க முடியும் என்றும்,

அபிவிருத்திச் சபைகளில் இடம்பெறுவதன் மூலம் அங்கு நடைபெறக்கூடிய அதிகார துஷ்பிரயோகங்களையும், ஊழல்களையும் அம்பலப்படுத்த முடியும் என்றும்,

யு. என். பி.யும், கூட்டணியும் அபிவிருத்திச் சபைகளை ஆதரிப்பதில் ஒன்றுபட்டிருப்பதால் தமக்குள் போட்டித் தவிர்ப்புச் செய்வதன் மூலம் ஏனைய கட்சியினர் பகிஷ்கரிப்புச் செய்யும் பட்சத்தில் வாக்கெடுப்பின்றியே ஏகமனதாக தெரிவு செய்யப்படும் வாய்ப்பினைப் பெற்றுவிடுவர் என்றும், அந்நிலையில் பகிஷ்கரிப்பு அர்த்தமற்ற தொன்றாகிவிடும் என்றும்;

தமிழினம் தமிழ்க்காங்கிரஸ் வேட்பாளர்கள் அனைவரையும் வெற்றியீட்டச் செய்வதன் மூலம் அபிவிருத்திச்சபைகளின் தந்தையான ஜே. ஆர். ஜெயவர்த்தனவுக்குத் தமது எதிர்ப்பினையும் ஜனாதிபதியின் விருப்பப்படி அபிவிருத்தி சபைகளை ஆதரித்த கூட்டணிக்கு தகுந்த பாடத்தையும்; சுதந்திரத்திற்கான தமது ஆதரவினையும் தெரிவிப்பார்களாயின் அபிவிருத்திசபைகளைப்பகிஷ்கரிப்பது பற்றி உரிய சந்தர்ப்பத்தில் காங்கிரஸ் ஆராயும்.

## இன மத...

(5-ம் பக்கத் தொடர்ச்சி)

யாகப் பாவிக்கப்படும் சகல வாத்தியங்களும் தமிழ்மக்களுக்கே சொந்தமானவை யென்று தமிழிசை அறிஞர்களாக விளங்கிய அறிஞர் சுவாமி விபுலானந்தர் கூறியுள்ளார். பரத நாட்டியக்கலை சகல இன மக்களுக்கும் பொதுவானதாக அமைந்து விளங்குவதுபோல சகல மதத்தினருக்கும் பொதுவானதாகும். இக்கலையைப் பேணிப் பாதுகாப்பது தமிழ் மக்களின் தலையாய கடமையாகும்.

விழாவிற்குத் தலைமை வகித்த அருட்திரு. அன்ரன் திலகரத்தினம் இராசநாயகம் அடிகளார் பேசுகையில் பரதக்கலை மனிதரைப் புனிதமாக்கும் தெய்வீகத்தன்மையுடையதாக விளங்குகிறது. இக்கலை பல்வேறு மதத்தினருக்கும் பொதுவாக அன்று தொட்டு இன்றுவரை விளங்கி வருகிறது. குருபக்தியுடன் தான் இக்கலையை நன்கு கற்க முடியும். இளைஞர்களும், யுவதிகளும் குருபக்தி குறைந்தவர்களாக விளங்கும் இக் காலகட்டத்தில் இக் கலையை நன்கு பயில குருபக்தி எவ்வளவு முக்கியம் என்பது வெளிப்படையாகத் காட்டுகிறது. கிறிஸ்தவர்களும் இக்கலையை நன்கு பேணிப் பாதுகாக்க முன் வந்திருப்பது பாராட்டுதற்குரியதாகும். என்று குறிப்பிட்டார்.

விருந்தினராகக் கலந்து கொண்ட சிமெந்துத் தொழிற்சாலை ஆளணி முகாமையாளர் திரு. சி. ஈ. குணரத்தினமும் இவ்விழாவில் சிறப்புரை நிகழ்த்தினர்.

## புதிய பாராளு...

[1ம் பக்கத் தொடர்ச்சி]

தோஷமான சூழலில் மக்கள் தேவைகளை நிறைவேற்றி வைப்பதை நோக்கமாகக் கொள்ள வேண்டும்."

மேற்கண்டவாறு எதிர்க்கட்சித்தலைவர் திரு. அ. அமிர்தலிங்கம் ஸ்ரீ ஜயவர்த்தனபுர புதிய பாராளுமன்ற கட்டடத்தின் 'நவரத்தின பிரதிஷ்டை' வைபவத்தையொட்டி அனுப்பிவைத்த செய்தியில் தெரிவித்துள்ளார்.

அச்செய்தியில் திரு. அமிர்தலிங்கம் மேலும் கூறியுள்ளதாவது: "இவ் வைபவத்தில் கலந்து கொள்ள முடியாமையையிட்டு வருந்துகின்றேன். ஏற்கனவே திட்டமிடப்பட்டு விட்ட சொந்தவிடயம் காரணமாக தமிழ்நாடு செல்ல வேண்டியிருப்பதால்தான் இவ் வைபவத்தில் கலந்துகொண்டு எனது வாழ்த்துரையை நேரில் தெரிவிக்க முடியாதுள்ளது."

### 'தேவா' மகிழ்ச்சி

இவ்வைபவத்தில் உள்நாட்டலுவல்கள் அமைச்சர் திரு. கே. டபிள்யூ. தேவநாயகம் உரையாற்றுகையில் கூறியதாவது: "இந்த வைபவத்தின் அமைப்பாளர் என்ற ரீதியில் நான்மகிழ்ச்சியடைகின்றேன். இன்றைய இத்தினம்சரித்திரத்தில் பொன்னெழுத்துக்களால் பொறிக்கப்பட வேண்டும். புதிய அரசியலமைப்பில் ஜனாதிபதி திரு.ஜே. ஆர். ஜெயவர்த்தன சகல மக்களுக்கும் உரிமைகள் வழங்கியுள்ளார்" என்றார்.

### சபாநாயகர் உரை

சபாநாயகர் ஜனாப் பாக்கீர் மாக்கார் இவ்வைபவத்தில் உரையாற்றுகையில், "சரித்திரத்தில் ஒரு பெருமிதத்தைப் பெறப்போகின்ற இத்தினம் சரித்திரமுக்கியத்துவம் வாய்ந்த [illegible] ஆர். ஜெயவர்த்தன சாதி, மத, இன வேறுபாடின்றி மக்களுக்குச் சேவையாற்றிவருகின்றார். அவரின் தலைமையின்கீழ் மக்கள் ஒன்றுபட்டு உழைக்க வேண்டும்" என்று கேட்டுக் கொண்டார்.

இவ் வைபவத்தில் பௌத்த குருமார் பிரித்ஓத புதிய பாராளுமன்றத்தின் பிரதான நுழைவாயிலின் படிக்கட்டுப் பகுதியில் நவரத்தினகற்கள் பதியப்பட்டது.

இவ் வைபவத்தையொட்டி ஜனாதிபதி மாளிகையிலிருந்து கோட்டேயிலுள்ள புதிய பாராளுமன்றக் கட்டடம் வரை வீதியின் இருமருங்கிலும் தேசியக்கொடிகள் கட்டப்பட்டிருந்தது. புதிய பாராளுமன்றக் கட்டடத்திற்கு முன்னால் கோட்டை இராச்சியத்தின் பழையகொடியும், இலங்கையின் தேசியக் கொடியும் ஜனாதிபதியின் கொடியும் பறக்கவிடப்பட்டிருந்தது. (ம)

## கோஷ்டி...

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

தேகநபர்களும் இருப்பதன் காரணமாக, ஆஸ்பத்திரியில் பொலிஸ்பாதுகாப்பு அளிக்கப் பட்டுள்ளது.

ஆஸ்பத்திரிக்கு கொண்டு வரும் வழியில் குமாரவேலுவும் ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்டபின் நேற்று யோகசாமியும் மரணமானார்கள்.

பகலில் ஆரம்பமான சண்டையைத்தொடர்ந்து இரவும் பலத்த மோதல் ஏற்பட்டதாகவும், இதன்பின் பொலிசார் சென்று அமைதியை நிலைநாட்டியதாகவும் கூறப்படுகிறது.

பொலிசார் தொடர்ந்து விசாரணைசெய்து வருகின்றனர். (-)

## தெஹ்ரான்...

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

பீடம் இன்று தீர்மானம் மேற்கொண்டிருப்பதாக ஊர்ஜிதப் படுத்துகின்றன.

தெஹ்ரான் சர்வதேச விமான நிலையம் ஒரே புகைமண்டலமாக இருப்பதாக யுத்தமுனையிலிருந்து செய்தியாளர்கள் அறிவித்துள்ளனர். ஆனுலும் ஈரான் இதுபற்றி எதுவும் அறிவிக்கவில்லை.

விமானநிலையம் செல்லும் வீதிகள் யாவும் மூடப்பட்டுள்ளன என்று நேற்று அறிவிக்கப் பட்டது.

## இசை நிகழ்ச்சி...

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

பத்திரியில் அனுமதிக்கப்பட்டார். மூவர் சிகச்சைபெற்று சென்றனர். மூவர் சிறுகாயமடைந்தனர்.

இச் சம்பவம் தொடர்பாக சந்தேகத்தின்பேரில் கைது செய்யப்பட்ட 25 இளைஞர்கள் நேற்று யாழ் நீதவான் திரு. ரி. ஜோகநாதன் முன்னிலையில் ஆஜர்செய்யப்பட்டு அடுத்தமாதம் 3ம் தேதிவரை றிமாண்டில் வைக்கப்பட்டனர்.

திறந்தவெளியரங்கு பகுதியில் சில சயிக்கில்கள் பொலிசாரினுல் கைப்பற்றப்பட்டுள்ளது. (க)

## பலே ஆசாமி!

(யாழ்ப்பாணம்)

பண்ணைப் பகுதியில் வேலைசெய்யச் சென்ற கைதிகளில் ஒருவர், நேற்று தப்பிச்சென்று விட்டார்!

யாழ் சிறைச்சாலையிலிருந்து 5 கைதிகள் பண்ணைப் பகுதியில் வேலைசெய்ய பாதுகாப்புடன் கொண்டுசெல்லப்பட்டனர். இவர்களில் கிளிநொச்சியைச் சேர்ந்த மாணிக்கம் குணம் என்ற கைதி தப்பிச் சென்றுள்ளார். (க)

## சாந்தி...

(1ம் பக்கத் தொடர்ச்சி)

மாவட்ட நீதிபதி திரு, எம். எஸ். சுந்தரலிங்கத்தினுல் தடை செய்யப்பட்டுள்ளது.

இந்நிறுவனத்தின் பங்குதாரரான றப்பியேல் திருச்செல்வம் என்பவர் தமக்கு எவ்வித அறிவித்தலும் கொடுக்காமல் இக் கூட்டம் நடைபெறவிருப்பதாகவும், அதனைத் தடை செய்யுமாறும் யாழ். மாவட்ட நீதிமன்றத்தில் மனுத்தாக்கல் செய்ததையடுத்து, மேற்கண்டவாறு கட்டளை பிறப்பிக்கப்பட்டது.

யாழ். மாவட்ட நீதிபதி திரு. கி. பாலகிட்ணர் லீவிலிருப்பதால் இக்கட்டாணை அடுத்த மாதம் 14ம் திகதிவரையுமே அமுலிலிருக்கும் எனப்பதில் நீதிபதி கட்டளையின்போது தெரிவித்தார்.

வழக்காளி சார்பில் சட்டத்தாரணி ந. பத்மநாதன் சட்டத்தாரணி இ. பாலசுப்பிரமணியத்தின் அனுசரணையுடன் ஆஜரானுர். [அ]

பயிற்சி

றேடியோ-ரெலிவிசன் ஏயர் கொண்டிசனிங் மூன்று மாத டிப்பிளோமா பயிற்சிகள் சிறந்த செய்முறைப் பயிற்சிகளுடன். உடன் நேரில் வரவும். நாஷனல் அக்கடமி, 11, மொம்ளாக்கட்டிடம், ஸ்ரான்லிவீதி, யாழ்ப்பாணம். 6905

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இப்பத்திரிகை ஈழநாடு லிமிட்டெட் ஸ்தாபனத்தாரால் யாழ்ப்பாணம் சிவன்கோவில் மேற்கு வீதி, 63-ம் இலக்க அச்சகத்தில் செப். 23-ந் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது. Registered as a News Paper at the General Post Office Sri Lanka under No. GB 8948/78 The Eelanaadu P. B. No. 49, Telegram Eelanaadu, Phone 389.